வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ——— ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 28.12.2022 புதன்கிழமை | இதழ் : 19 | பக்கங்கள் : 16

*மின் கட்டண அதிகரிப்பு இல்லையேல்*

# இருளில் வாழ்வதற்கு மக்கள் பழகவேண்டும்!

## இப்படி எச்சரிக்கிறார் மின்சக்தி அமைச்சர்



**கொழும்பு, டிசெம்பர் 28**

**2023ஆம் ஆண்டு தடையற்ற மின் சாரத்தை விநியோகிக்கவேண்டும் என் பதற்காகவே கட்டணத்தில் திருத்தம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. மின் சார கட்டணத்தை அதிகரிக்காது விட் டால் மக்கள் பல மணித்தியாலங்கள் இருளில் வாழப் பழகிக் கொள்ளவேண்டும்.**

- இப்படி மின்சக்தி மற்றும் எரிசக்தி துறை அமைச்சர் காஞ்சன விஜய சேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜனவரி மாதம் முதல் வாரத்தில் மின் கட்டணம் நிச்சயம் அதிகரிக்கப்படும். சட்ட ஆலோசனைக்கு அமை யவே கட்டணம் திருத்தப் படும். இந்தத் தீர்மா னத்தை எவரேனும் நீதி மன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தினால் அதனை எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம் - என்றும் அவர் கூறியுள்ளார்.

நேற்றைய 12

# 10 ஆண்டுகளில் இல்லாதவாறு யாழில் டெங்கு மரணம் உயர்வு!

*சுகாதார சேவைகள் பணிப்பாளர்*

யாழ்ப்பாணம், டிசெ. 28

கடந்த பத்து வருடங் களில் இல்லாதளவுக்கு டெங்கு நோயால் இறந்த வர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள் ளது என்று யாழ். பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ் வரன் தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் டெங்கு நோயால் 3 ஆயிரத்து 294 பேர் பீடிக்கப்பட்ட னர். அத்துடன், 9 பேர் உயிரிழந்தனர் என்றும் அவர் கூறினார்.

நேற்று செவ்வாய்க் கிழமை மாவட்ட மட்ட சுகாதார மேம்பாட்டுக் குழுக் கூட்டம் மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலை மையில் மாவட்ட செயலகத்தின் 12

## கிளிநொச்சியில் சடலம் மீட்பு!

கிளிநொச்சி,டிசெ. 28

கரடிபோக்கு சந்தியை அண்மித்த பகுதியில் நீர்ப்பாசன கால்வாயிலி ருந்து ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டது.

சுமார் 40 வயது மதிக் கத்தகவரே இவ்வாறு சடலமாக நேற்று மாலை மீட்கப்பட்டார்.

அடையாளம் 12

## வடக்கு, கிழக்கு மக்களுக்கு எந்த பிரச்னையும் இல்லை!

*எல்லே குணவங்ஸ தேரர் சொல்கிறார்*

கொழும்பு, டிசெ. 28

தேசிய பிரச்னைக்கு தீர்வு காண்பதாக குறிப் பிட்டுக் கொண்டு இல் லாத பிரச்னையை தோற்று விக்கும் முயற்சியை அர சாங்கம் கைவிட வேண் டும். வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அரசி யல்வாதிகளுக்கு மாத்தி ரம் அரசியல் பிரச்னை உள்ளதே தவிர சாதாரண மக்களுக்கு எவ்வித பிரச் னைகளும் கிடையாது - என்று தேசிய வளங் களை பாதுகாக் கும் அமைப்பின் தலைவர் எல்லே 12

## மின் கட்டணம் 60% உயர்த்துக!

கொழும்பு, டிசெ. 28

மின்சாரக் கட்ட ணத்தை 60 - 65 சதவீதம் அதிகரிக்க வேண்டும் என்று இலங்கை மின்சார சபையின் பொது முகா மையாளர் றொஹான் செனவிரத்ன தெரிவித் தார்.

மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சின் வளாகத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித் தார்.

மின்சாரக் கட்டண உயர்வுக்கு பயன்படுத்தப் பட்ட 20 அனுமானங் களில் இருந்து தெரிவு செய்யப் 12



நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்று இடம் பெற்ற கஜமுக சூர சம்ஹாரத்தின் போது.... (படம் : வி.கஜீபன்)

## உள்ளூராட்சி சபைகள் தேர்தலுக்கு வேட்பாளரை கோருகிறது தமிழரசு!

கிளிநொச்சி, டிசெ. 28

இலங்கை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட் டக் கிளை உள்ளூராட்சி தேர்தலுக்கு வேட்பாளராகப் போட்டியிட விரும்புவோரை விண்ணப்பிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப் பள்ளி, பூநகரி பிரதேச சபைகளுக்கே வேட்பாளர் களிடமிருந்து விண்ணப்பங்களை அந்த மாவட்ட 12

## வியட்நாமில் தங்கியிருந்த 151 தமிழர்கள் நாட்டுக்கு!

கொழும்பு, டிசெ. 28

கனடாவுக்கு செல்ல முயன்று பழுதடைந்த கப்பலி லிருந்து காப்பாற்றப்பட்டு வியட்நாம் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 303 இலங்கையர்களில் 151 பேர் வியட்நாம் நேரப்படி பிற்பகல் 5 மணிக்கு விமான மூலம் இலங்கைக்கு திருப்பி 12

## தமிழ் தேசிய கட்சிகளின் கூட்டுக்கு மாவை தலைமை தாங்கவேண்டும்!

*விக்னேஸ்வரன் எம். பி. தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ. 28

தற்போதைய நிலை யில் மாவை சேனாதிரா சாவை தலைவராக கொண்டு தமிழ் தேசிய கட்சிகள் ஓரணியில் செயல்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் கூட் டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித் துள்ளார். அத்துடன், இலங்கை தமிழரசு கட்சி யிலுள்ள சுயநலவாதி களே தமிழ் மக்க ளின் ஒற்றுமைக்கு 12

## தேர்தலில் சேர்ந்து போட்டியா? இன்னமும் தீர்மானம் இல்லை!

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்!*

கொழும்பு, டிசெ. 28

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ் கட்சிக ளுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரி வித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர் தலில் இணைந்து போட்டியிடுவது 12

# உள்ளூராட்சித் தேர்தல் வர்த்தமானி தாமதமாகும்!

கொழும்பு, டிசெ. 28

உள்ளூராட்சி மன்றங்களுக் கான தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தலை ஒரு வாரத்துக்கு ஒத்திவைத்துள்ளதாக தேர்தல் கள் ஆணைக்குழு நேற்று உறுதிப்படுத்தியது.

இது தொடர்பில் தேர்தல் அதிகாரி ஒருவர் கருத்து வெளி யிடுகையில்,

உள்ளூராட்சி தேர்தலுக்கான வர்த்தமான அறிவித்தலை வெளியிட இந்த வாரம் தேர்தல் கள் ஆணைக்குழு அலுவலகம் விரும்பியது. ஆனால், அது ஒரு வாரம் தாமதமாகும் என்று தெரிவித்த அவர், தாமதத்துக் கான காரணத்தைத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

தேர்தலை நடத்த 12

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறுவது சில வேளைகளில் தாமதமாகலாம் என்ற செய்தி நேற்று முன்தினம் ஈழநாடுவில் தலைப்புச் செய்தியாக வெளிவந்திருந்தது.

அந்தச் செய்தியின் தகவலின்படி தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலுக்கான ஏற்பாடுகளை செய்து முடித்தாலும், முதலில் ஆறு மாதங்களுக்கு தேர்தலை பின்போட சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்த அரசாங்கம் தயாராகி வருவதாகத் தெரிவித்திருந்தது.

தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்டு தேர்தலில் போட்டியிடுபவர்களின் வேட்புமனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், அதனை ஆறு மாதங்கள் ஒத்திவைக்க அரசு திரைமறைவில் ஆயத்தங்களைச் செய்துவருகின்றது என்பதே அந்தச் செய்தியின் சாராம்சம்.

அப்படியெனில் இப்போது கோரப்படவுள்ள நியமனப்பத்திரங்களே நடக்கவிருக்கும் - அது ஆறு மாதங்களின் பின்னர் நடந்தாலும், ஏற்றுக்கொள்ளபடும் என்பதை ஊகிக்க முடிகின்றது.

அப்படியெனில், தேர்தல் எப்போது நடந்தாலும், அதற்கான நியமனப்பத்திரங்கள் இப்போது கோரப்பட்டு தாக்கல் செய்யப்படும் வேட்பாளர்களே அதில் போட்டியிடவிருக்கின்றனர்.

அப்படியெனில் இந்த வேட்புமனுக்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவைதான்.

அண்மையில் விக்னேஸ்வரனின் இல்லத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து தேர்தலை சந்திப்பது குறித்து ஒரு கூட்டம் ஒன்றை நடத்தியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இந்தக் கூட்டத்தில் வழக்கம்போல தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் கலந்துகொண்டிருந்தார்.

இதுபோன்ற கூட்டங்களில் கலந்துகொண்ட அனுபவம் மாவையருக்கு அதிகமாகவே உண்டு. ஆனால், அதில் எடுக்கின்ற எந்த முடிவையும் அவர் ஏற்றுக்கொண்டாலும், கடைசியில் கட்சியினருடன் கலந்து ஆலோசித்தே முடிவெடுப்பதாக சொல்லிச் செல்வார். ஆனால், அத்தோடு அது முடிந்துவிடும். இது ஜெனிவாவுக்கு கடிதம் அனுப்பவதிலிருந்து தேர்தலில் போட்டியிடுவது வரை நடந்துகொண்டுதானிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாமே ஒன்றாகத் தேர்தலை சந்திக்கவேண்டும் என்பது அவசியமானதுதான். ஆனால், அதற்காக நடக்கவிருக்கும் உள்ளூராட்சி தேர்தலையும் ஒன்றாக சந்திக்கவேண்டும் என்று யோசிப்பது சரியானதுதானா என்பதை அவர்கள் யோசித்ததாகத் தெரியவில்லை.

கடந்த இரண்டாயிரத்து பதினெட்டாம் ஆண்டு நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்ட சிறிய சிறிய குழுக்கள்கூட அந்த தேர்தல் முறையில் போனஸ் ஆசனங்களைப் பெற்றன. அதுவே, பல சபைகளில் அனைத்து வட்டாரங்களிலும் வெற்றிபெற்ற கட்சிகளால்கூட நிலையான ஆட்சியை வழங்க முடியாத நிலையை ஏற்படுத்தியது. அந்தத் தேர்தல் முறையிலேயே அடுத்த தேர்தலும் நடைபெறுமானால், தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியாக போட்டியிட்டால், மற்றையை கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் வரை பிரதிநிதிகளைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். இதனால்தான் தமிழரசு கட்சி நடக்கவிருக்கும் உள்ளூராட்சி தேர்தலை கூட்டமைப்பாக இல்லாமல் தனித்தனி கட்சிகளாக போட்டியடுவது பற்றியும் அதுபற்றிய தொழில் நுட்ப ரீதியான சாத்தியம் பற்றியும் ஆராய்ந்தது.

அப்போது தமிழரசின் அந்த யோசனை பற்றி இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தபோது, அது பற்றி தமிழரசு தனித்து ஆலோசனை செய்வது தவறு என்பதையே நாம் சுட்டிக்காட்டியிருந்தோம்.

அதுவே, மாகாண சபைகளுக்கான தேர்தலாக இருந்தால், தமிழ் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றாக ஓரணியாகப் போட்டியிட்டால் மாத்திரமே வடக்கு - கிழக்கு மாகாணங்களின் ஆட்சியை தமிழர் தரப்பு கைப்பற்றமுடியும்.

ஆனால், உள்ளூராட்சி தேர்தலில் தனித்துப் போட்டியிட்டாலும், தேர்தல் முடிந்த பின்னர் எப்படி ஒன்றிணைந்து செயல்படுவது என்பது பற்றி இப்போதே யோசிக்கலாம்.

அதைவிட இன்னுமொரு விடயம் ஒற்றுமை பற்றிய பேச்சுகள் எப்படி எங்கே நடைபெறவேண்டும் என்பதிலும் நமது கட்சிகளிடையே ஒரு தெளிவான வரைபடம் முதலில் தயாரிக்கப்படவேண்டும்.

வெறுமனே, தேர்தலில் எப்படி ஒன்றிணைந்து போட்டியிடுவது என்பது குறித்துப் பேசுவோம் என்று, விக்னேஸ்வரனின் இல்லத்தில் கூடுவதுகூட ஏற்றுக்கொள்ளக்கூடியதுதானா என்பதையும் கட்சிகளின் தலைவர்கள் தீர்மானிக்கவேண்டும்.

விருப்பு, வெறுப்புக்களுக்கு அப்பால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இன்று தமிழ் மக்களின் அரசியல் தலைமையை தன்னிடம் வைத்திருக்கின்றது. மற்றைய கட்சிகள் எல்லாம் அதற்கு பின்னால் அணிதிரளவேண்டியவை மாத்திரமே. அவற்றிலும் தனித்தனிக்கட்சிகள் என்றால் அதில் தமிழரசு. அதற்கு பிறகு ரெலோ இப்படி ஓர் ஒழுங்கு கடைப்பிடிக்கப்படவேண்டும். என்ன இருந்தாலும் பாராளுமன்ற பிரதிநித்துவமே கட்சிகளின் பலத்தை வெளிப்படுத்துவன.

ஒற்றுமை என்பதும், தேர்தலுக்கான ஒற்றுமையாக அன்றி, தமிழ் மக்களின் நலனுக்கான ஒற்றுமையாக இருக்கவேண்டும்.!

**- ஊர்க்குருவி**

# 309,234 இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்!

கொழும்பு, டிசெ. 28

குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் வருடாந்த அறிக்கையின்படி, 2021 ஆம் ஆண்டில் 3 இலட்சத்து 9 ஆயிரத்து 234 இலங்கை பிரஜைகள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் அந்த வருடத்தின் நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் வெளி நாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

டிசெம்பரில், 73 ஆயிரத்து 827 பேரும் மற்றும் நவம்பரில் 55 ஆயிரத்து 527 பேரும் வெளி நாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இதே ஆண்டில் இலங்கைக்கு வந்துள்ள மொத்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 54 ஆயிரத்து 146 பேராவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பிக்குகளின் வாயை அடைக்க அரசாங்கம் முயல்கின்றது!

கொழும்பு, டிசெ. 28

பிக்குகளை வாயடைக்க வைக்கும் அரசாங்கத்தின் எந்த முயற்சிக்கும் இடமளிக்க மாட்டோம் என எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு சட்டமூலங்கள் மூலம் பிக்குகள் மீது கை வைக்கும் முயற்சிகளை முறியடிக்கப் போவதாகவும் அவர் கூறினார்.

கோட்டே நாக விகாரையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் குணவன்ச தேரர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஐ)

# அடுத்தாண்டு விவசாயிகளுக்கு 36,000 தொன் உரம் வழங்கப்படும்!

கொழும்பு, டிசெ. 28

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க உதவித்திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் ஊடாக 2023 இல் அனைத்து நெல் விவசாயிகளுக்கும் 36 ஆயிரம் தொன் டிரிபிள் சுப்பர் பொஸ்பேற் உரம் வழங்கப்படவுள்ளது.

விவசாயிகளுக்காக ஒதுக்கப்பட்ட உரத்தின் அளவு ஜனவரி 5ஆம் திகதி வரை அனைத்து கமநல சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க உதவித்திட்டம் ஆகியவற்றின் நிதியுதவியுடன், இலங்கையில் உள்ள அனைத்து நெல் விவசாயிகளுக்கும் 36 ஆயிரம் தொன் டிரிபிள் சுப்பர் பொஸ்பேற் உரத்தை விவசாய அமைச்சின் ஊடாக விநியோகிக்கவுள்ளது. 2022- 2023 பெரும் போகத்தில் பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் அடிப்படையில் விவசாயி ஒருவருக்கு வழங்கப்படும் உரத்தின் அளவு தீர்மானிக்கப்படும்.

விவசாயி ஒருவருக்கு ஒதுக்கப்படும் உரத்தின் அளவை நிர்ணயம் செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட இந்த பெரும்போகத்தில் பயிரிடப்பட்ட நிலப்பரப்புடன் சேர்த்து, விநியோகப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதுடன், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அனைத்து கமநல சேவை நிலையங்களிலும் அது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தகுதியுள்ள அனைத்து நெல் விவசாயிகளையும் அந்தந்த கமநல சேவை நிலையத்திற்குச் சென்று அவர்களின் விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளதை உறுதிசெய்துகொள்ளுமாறு உலக உணவு மற்றும் விவசாயத் தாபனம் கேட்டுக்கொண்டுள்ளது. விநியோகப் பட்டியல்கள் 2023 ஜனவரி 5ஆந் திகதி வரை காட்சிப்படுத்தப்படுவதுடன், உர விநியோக திகதி கமநல சேவை நிலையங்கள் மூலம் பகிரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பொலிஸ் உத்தியோகத்தரை அறைந்த இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 28

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கன்னத்தில் அறைந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த அந்த நபர் தலைக்கவசம் அணியாத நிலையில், பொலிஸ், இராணுவத்தின் சோதனைச் சாவடியைக் கடந்து செல்ல முற்பட்டுள்ளார்.

அவரை மறித்த பொலிஸ் உத்தியோகத்தர், சாலை விதி மீறல் மற்றும் தலைக்கவசம் அணியாமல் வாகனம் ஓட்டுவதால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து அறிவுறுத்தியுள்ளார்.

இந்தசமயத்தில், சந்தேகநபர் பொலிஸ் உத்தியோகத்தரை அறைந்துவிட்டு அங்கிருந்து செல்ல முயன்றார். இதையடுத்து இராணுவத்தினரின் உதவியுடன் கைது செய்யப்பட்டார். (ஐ)

## சித்தார்த்தன் எம். பியால் உதவித்திட்டங்கள் அளிப்பு




யாழ்ப்பாணம், டிசெ. 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தனால் தென்மராட்சியில் பல்வேறு உதவித்திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

தென்மராட்சி பிரதேசத்தின் கரம்பகம் - தச்சன்கட்டு வைரவர் ஆலயம், கெற்பேலி கிழக்கு முத்துமாரியம்மன் ஆலயம், கெற்பேலி கிழக்கு தரவை யம்பதி நாச்சிமார் கோயில் ஆகிய ஆலயங்களுக்கு கட்டுமான பணிகளுக்கான நிதி வழங்கப்பட்டது.

இதேபோன்று, விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயத்துக்கு கணினி மற்றும் கலர் பிரதி எடுக்கும் இயந்திரம் பிரதேச செயலகத்தில் வைத்து பாடசாலை நிர்வாகத்திடம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த உதவித் திட்டங்கள் அவரின், பன்முகப்படுத்தப்பட்ட வரவு -செலவுத் திட்ட நிதியிலிருந்து வழங்கப்பட்டன.

உதவி திட்டங்களை பாராளுமன்ற உறுப்பினர் நேரடியாக உரியவர்களுக்கு வழங்கி வைத்தார். இதன் போது, சாவகச்சேரி பிரதேச செயலர் சுபலிங்கம் உசா, பிரதேசசபை உப தவிசாளர் செ. மயூரன், சாவகச்சேரி நக ராட்சி மன்ற முன்னாள் உறுப் பினர் ஞா. கிஷோர் ஆகியோ ரும் உடனிருந்தனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
28.12.2022 புதன்கிழமை
பிலவ வருடம், மார்கழி 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சர்வதேச அழுத்தங்கள் நீர்த்துப் போய்விடுமா?

ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களின் பிரச்னையை தீர்க்கப் போவதாகக் கூறுவது ஒரு சதிமுயற்சி - இதன் தீய திட்டத்தைப் புரிந்துகொள்ளாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணிலின் வலைக்குள் சிக்கப்போகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் பேச்சில் ஈடுபடுவது அடிப்படையிலேயே தவறானது. இதன் மூலம் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் அழுத்தங்கள் நீர்த்துப்போய் விடும். இவ்வாறு சிலர் வாதிட முயற்சிப்பதைக் காண முடிகின்றது.

ரணிலால் இலங்கையின்மீதான மனித உரிமைகள் அழுத்தங்களை நீர்த்துப்போகச் செய்ய முடியுமா? அந்தளவுக்கு ரணில் விக்கிரமசிங்க ஒரு பலமான நபரா? ரணில் விக்கிரமசிங்க மூன்றாம் உலக நாடொன்றின் ஜனாதிபதி. அதிலும் இன்றைய நிலையில், வெளியாரிடம் கையேந்தி நிற்கும் ஒரு நாட்டின் தலைவர். வெளியாரின் உதவியில்லாது போனால் இலங்கையை அவரால் மீட்க முடியாது. எனவே, இவ்வாறான ஒருவரால் மேற்குலக நாடுகளால் முன்னெடுக்கப்படும் அழுத்தங்களை எவ்வாறு பலவீனப்படுத்த முடியும்? அமெரிக்காவின் அழுத்தங்களை ஒரு சாதாரண ரணில் விக்கிரமசிங்கவால் திசைதிருப்ப முடியுமா? உண்மையிலேயே மேற்குலக நாடுகள் - குறிப்பாக இலங்கையின் மனித உரிமைகள் விடயத்தில் மென்மையான அழுத்தங்களை பிரயோகித்துவரும் அமெரிக்கா, பிரித்தானியா, கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை - முக்கியமாக, அமெரிக்கா இலங்கையின் மீதான பிடியை இறுக்க வேண்டுமென்று எண்ணினால் அதனை எவராலும் தடுக்க முடியாது. ஏன் இந்தியாவால்கூட முடியாது. இதுதான் உண்மை. ஒருவேளை ரணிலால் ஜெனிவாவை மடைமாற்ற முடியுமென்றால் அதற்கு ரணிலின் திறமையல்ல, காரணம் - மாறாக ரணில் போன்ற ஒரு சிறிய - வறிய நாட்டின் ஜனாதிபதியால்கூட பலவீனப்படுத்தப்படக் கூடியளவுக்கா ஜெனிவா பலவீனமாக இருக்கின்றது.

எனவே, ரணிலால் விடயங்கள் மடைமாற்றப்படுகின்றது என்றால், அதற்கு கூட்டமைப்பை குற்றஞ்சாட்டுவதில் பயனில்லை. குற்றஞ்சாட்ட வேண்டுமென்றால் இலங்கையின் மனித உரிமைகள் விடயங்களில் ஆர்வம் காண்பிக்கும் மேற்குலக நாடுகளைத்தான் குற்றம்சாட்ட வேண்டும். ஆனால், அவ்வாறு குற்றம்சாட்டுவதிலும் பயனில்லை. ஏனெனில், எந்தவொரு நாடும் பிறிதொரு நாட்டின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கும்போது, குறித்த நாட்டை முற்றிலும் தனிமைப்படுத்தாத வகையில்தான் அழுத்தங்களை பிரயோகிக்கும். இலங்கையின்மீது மனித உரிமைகள் சார்ந்து அழுத்தங்களை பிரயோகித்துவரும் நாடுகள் அனைத்துமே மறுபக்கத்தில் கொழும்புடன் நல்லுறவை பேணி வருகின்றது. இராணுவ ரீதியான ஒத்துழைப்புகளை பேணிவருகின்றது. இந்த பின்புலத்திலிருந்துதான் விடயங்களை நாம் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

அரசாங்கத்துடன் பேச்சுக்கு சென்றால், அதனைப் பயன்படுத்தி ஜெனிவாவை பலவீனப்படுத்தி விடுவார்கள் என்பது தவறானதொரு புரிதலாகும். ஜெனிவாவை ரணில் விக்கிரமசிங்கவாலோ இலங்கையின் வெளிவிவகார அமைச்சாலோ ஒருபோதும் பலவீனப்படுத்த முடியாது. 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து, மனித உரிமைகள் பேரவையின் அழுத்தங்கள் கீழிறங்கியதான ஒரு பார்வையுண்டு. அவ்வாறான பார்வையில் தவறில்லை. ஆனால், அதற்கு அப்போதிருந்த ரணில் விக்கிரமசிங்க மற்றும் மங்கள சமரவீரவின் கெட்டித்தனம் காரணமல்ல. மாறாக, மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மேற்குலக நாடுகளுடன் மோதும் நிலைப்பாட்டை எடுத்தமையால் மேற்குலகின் அழுத்தங்களும் சற்று காரமாக வெளிப்பட்டது.

ஆனால், ரணில் அரசாங்கம் அவ்வாறு முரண்படவில்லை. தாம் ஒத்துழைப்பதாக அறிவித்தது. ஒரு நாடு விடயங்களில் ஒத்துழைப்பதாக அறிவித்த பின்னர், அந்த நாட்டின் உள்நாட்டு அணுகுமுறைகளில் நம்பிக்கையில்லை என்று எந்தவொரு நாடும் கூறப்போவதில்லை. இப்போதும் அதுதான் நடக்கின்றது. ஜனாதிபதி ரணில் பிரச்னைகளை தீர்க்கப் போவதாகக் கூறுகின்றார். அதற்காக பேசவருமாறு தமிழ் கட்சிகளை அழைக்கின்றார். இல்லை - நாங்கள் பேச்சில் பங்குகொள்ளமாட்டோம் என்றால் அது யாருக்கு சாதகமானது? தமிழர் பேச்சை தவிர்த்தால் எந்த நாடு தமிழர்களின் முடிவு சரியானதென்று கூறப் போகின்றது? எனவே, பேச்சுக்களில் பங்குகொள்வது பிரச்னையல்ல - மாறாக, அதனை உச்சபட்சமாக எவ்வாறு பயன்படுத்திக் கொள்வதென்னும் தந்திரோபாயத்தில்தான் தமிழர் தரப்பு கவனம் இருக்க வேண்டும்.

# 5,401 பேர் இரட்டை குடியுரிமைக்கு இலங்கையில் விண்ணப்பித்தனர்!

கொழும்பு, டிசெ. 28

இலங்கையில் 2021ஆம் ஆண்டில் 5,401 பேர் இரட்டைக் குடியுரிமைக்காக விண்ணப்பித்தனர் என்று குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. அவர்களில் பெரும் எண்ணிக்கையானனோர் அவுஸ்திரேலியர்கள். இவர்களின் எண்ணிக்கை 1,621.

இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பித்தவர்களில் 795 அமெரிக்கர்களும் உள்ளனர் எனவும் குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. டிசெம்பர் 31, 2021 வரை இந்த நாட்டில் 4,654 பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த நாட்டில் அகதி அந்தஸ்து கோரி 208 வெளிநாட்டவர்கள் விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் 149 பேர் பாகிஸ்தானியர்கள், 27 பேர் ஆப்கானிஸ்தான் நாட்டவர்களாவர்.

மேலும், டிசெம்பர் 31, 2021க்குள் அகதி அந்தஸ்தைப் பெற்று இந்த நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 912 ஆக உள்ளது. அவர்களில் 709 பேர் பாகிஸ்தானியர்கள், 113 பேர் ஆப்கானியர்கள்.

இதேவேளை, 2021ஆம் ஆண்டு வருகை தந்த 77 வெளிநாட்டவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், நாட்டில் தங்கியிருந்த 505 வெளிநாட்டவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு அவர்களில் 130 பேர் நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டனர் என்றும் அந்தத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

(ஐ)

## இடமாற்றப்பட்டார் அரச அதிபர் மகேசன்

யாழ்ப்பாணம், டிசெ. 28

யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் க. மகேசன் பதவியிலிருந்து பணி இடம் மாற்றப்பட்டுள்ளார்.

அவர், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும், 2023 ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-03)



இயேசு பாலனின் பிறப்பை கொண்டாடும்முகமாக சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும்விதமாக யாழ். நகர புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் அமைக்கப்பட்ட பாலன் குடில்...! (படம் - ஐ. சிவசாந்தன்)

# காணாமல் போன மீனவர்கள் இருவரும் நேற்று மீட்கப்பட்டனர்!

மன்னார், டிசெ. 28

மன்னார்- முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சிலாவத்துறை காயாக்குளியை சேர்ந்த இரண்டு மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று காணாமல்போன நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் மீட்கப்பட்டனர்.

மன்னார்- முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சிலாவத்துறை காயாக்குளியை சேர்ந்த இரண்டு மீனவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் காயாக்குளி கடற்கரையில் இருந்து மீன் பிடிக்க சென்றுள்ளனர்.


19 மற்றும் 23 வயது மதிக்கத்தக்க இரண்டு இளைஞர்கள் இவ்வாறு மீன் பிடிக்க கடலுக்கு சென்ற நிலையில் காணாமல் போயிருந்தனர். இருவரையும் சக மீனவர்கள் தொடர்ச்சியாக தேடி வந்தனர்.

இந்த நிலையில் புத்தளம் கற்பிட்டி கடல் பகுதியில் இயந்திரம் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட படகை அவதானித்த கற்பிட்டி மீனவர்கள் குறித்த இருவரையும் மீட்டனர்.

இதன்போது குறித்த படகில் இருந்த இருவரும் சிலாவத்துறை காயாக்குளிப் பகுதியில் காணாமல் போன இளைஞர்கள் என்பதை உறுதிப்படுத்திய கற்பிட்டி மீனவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் 12.30 மணியளவில் பழுதடைந்த படகு மற்றும் இரண்டு மீனவ இளைஞர்களையும் காயாக்குளி மீனவர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
புதிய முயற்சி ஒன்றில் லாபம் காண்பீர்கள். வியாபாரத்தில் புதிய அணுகுமுறையை கையாளுவீர்கள். வருவாய் அதிகரிக்கும். நிதி நிலை உயரும். வராமல் இருந்த பணம் வந்து சேரும்.

**இடபம்**
வியாபாரத்தை விரிவு செய்ய திட்டமிடுவீர்கள். நண்பர்களின் ஒத்துழைப்பு நலம். முயற்சி வெற்றியாகும். பணியாளர்களின் குறைகளைக் கேட்டு சரி செய்வீர்கள். தொழிலில் ஏற்பட்ட தடைகள் விலகும்.

**மிதுனம்**
உங்கள் முயற்சி லாபமாகும். எதிர்பார்த்த செய்தி வீடு தேடி வரும். பிரச்னை ஒன்று தீரும். செல்வாக்கு உயரும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் தீரும். பாதியில் நின்ற ஒரு செயல் இன்று பூர்த்தியாகும்.

**கடகம்**
புதிய முயற்சிகள் வேண்டாம். மற்றவரை நம்பி செய்யும் செயல் இழுபறியாகும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். எதிர்பாராத சங்கடங்களை இன்று சந்திப்பீர்கள்.

**சிம்மம்**
விருப்பம் நிறைவேறும். தம்பதிகளுக்குள் இருந்த சங்கடம் தீரும். ஒருவரை ஒருவர் அனுசரித்து செல வீர்கள். பணியிடத்தில் உங்கள் ஆலோசனைகளுக்கு வரவேற்பு இருக்கும். பாராட்டு அதிகரிக்கும்.

**கன்னி**
உயர்ந்த இடத்தில் இருப்பவர்களை சந்திப்பீர்கள். முயற்சி ஒன்று லாபமாகும். உறவினர்கள் ஆதரவாக இருப்பர். புதிய பொறுப்பு உங்களைத் தேடி வரும். உதவி கேட்டு ஒருவர் உங்களை சந்திப்பார்.

**துலாம்**
பூர்வீக சொத்து பிரச்னை மீண்டும் தோன்றும். பேச்சில் நிதானம் அவசியம். கவனமுடன் செயல்படுங்கள். பிள்ளைகள் எதிர்காலம் குறித்த எண்ணம் உண்டாகும். சேமிப்பில் கவனம் செல்லும்.

**விருட்சிகம்**
எதிர்பார்ப்பு ஒன்று தள்ளிப்போகும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். நண்பர்களால் அனுகூலம் காண்பீர்கள். வியாபாரத்தில் ஆதாயம் ஏற்படும்.

**தனுசு**
பணியாளர்களின் ஒத்துழைப்புடன் வியாபாரத்தை விரிவு செய்வீர்கள். நிதி நிலை உயரும். உங்கள் அணுகுமுறையால் போட்டியாளர்கள் விலகிச் செல்வார்கள். உங்கள் செயல் வெற்றியாகும்.

**மகரம்**
கேட்ட இடத்தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் ஏற்பட்ட சங்கடம் விலகும். புதிய வாய்ப்பு ஒன்று உங்களைத் தேடி வரும். வருமானம் அதிகரிக்கும்.

**கும்பம்**
செயல்களில் குழப்பம் ஏற்படும். மற்றவர்கள் உங்களை அலட்சியம் செய்வதாக நினைத்து வருந்துவீர்கள். அலைச்சல் அதிகரிக்கும். பணியில் கூடுதல் கவனம் செலுத்துங்கள்.

**மீனம்**
அலைச்சல் அதிகரிக்கும். எடுத்த வேலையை முடிக்க முடியாமல் சங்கடப்படுவீர்கள். பணியிடத்தில் சில பிரச்னைகளை சந்திக்க வேண்டி வரும். செயல்களில் கவனம் தேவை. பழைய கடன்களால் நெருக்கடிகளை சந்திப்பீர்கள்.

# கறுப்புக் குடையைக்கூட தி.மு.க. மத்திய அரசுக்கு எதிராக விரிக்காது!

## நாம் தமிழர் சீமான்


சென்னை, டிசெ. 28

தி. மு. க. அரசு, மத்திய அரசுக்கு எதிராகக் கறுப்பு குடையைக்கூட விரிக்க தயங்கு பவர்கள் என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பழைய பேருந்து நிலையம் அருகே தொடர் மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு பேசிய அவர்,

நாம் தமிழர் கட்சி என்பது மாற்றத்துக்கான கட்சி, குறைகளை கேட்டு வந்த கட்சி அல்ல, தீர்க்க வந்த கட்சி தமிழகத்தில்



தற்போது ஆசிரியர்கள், செவிலியர்கள், மருத்துவர்கள், மாணவர்கள், மீனவர்கள், விவசாயிகள், போக்குவரத்து தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவருக்காகவும் வீதிக்கு வந்து போராடி வருகிறது.

ஆனால், தமிழகத்தை ஆளும் ஆட்சியாளர்கள் சொல்கிறார்கள் சிறந்த ஆட்சி என்று. இவர்கள் தமிழக மக்களை ஏமாற்றுகிறார்கள். இதுதான் திராவிட மொடல் ஆட்சி. தி. மு. க. அரசு மத்திய அரசின் கொத்தடிமை , மோடிக்கு எதிராக கறுப்பு குடையை கூட விரிக்க தயங்குபவர்கள், வெளியில்தான் வீரமாக பேசுவார்கள் என கூறினார்.

ஏற்கனவே தமிழகத்தில் போதுமான வசதிகளுடன் விமான நிலையம் இருக்கும் போது மீண்டும் புதிதாக விமான நிலையம் அமைப்பது தேவையற்றது என்றும் சொன்னார். (ஐ)

# அ. தி. மு. க. இணைப்பு பேச்சு; அது வடிகட்டிய முழுப் பொய்!

## முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார்



சென்னை, டிசெ. 28

அ. தி. மு. க. இணைப்பு குறித்த பேச்சு நடைபெற்று வருவதாக சசிகலா கூறுவது வடிகட்டிய பொய் என முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

சுனாமி அஞ்சலி நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் அமைச்சர் ஜெயக் குமார்,

இந்த விடியா அரசு எந்த இயற்கை இடர்பாடுகளுக்கும் மக்களுக்கு நன்மை செய்யவில்லை. மாண்டஸ் புயல் கரையை கடந்த பின்பும்கூட மீனவர்களுக்கு எந்த நிவாரணமும் வழங்கவில்லை. 10இற்கும் மேற்பட்ட கேள்விகளை மீனவர்களிடம் கேட்டு அலைக்கழிப்பு செய்கிறது.

மீனவர்கள் அ. தி. மு. கவுக்கு தான் ஆதரவு அளிப்பார்கள் என தெரிந்து இவர்களை வஞ்சிக்கிறது தி. மு. க. அரசு.

அ. தி. மு. கவை இணைக்க பேச்சு வார்த்தை நடைபெறுவதாக கூறிய சசிகலாவின் கருத்துத் தெரிவிப்பது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், “அது ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய். பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்து பொய்யின் ஒரு உருவமாய் இருப் பவர்தான் சசிகலா”, என்றும் அவர் கூறினார்.

# மதவெறி கொண்ட சக்திகள் ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது

## கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர்

சென்னை, டிசெ. 28

மத வெறி கொண்ட சக்திகள் ஆட்சிக்கு வந்து விடக் கூடாது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் ஆர். நல்லகண்ணு தெரிவித்துள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் ஆர். நல்லகண்ணுவின் 98 ஆவது பிறந்தநாளான நேற்று முதல்வர் மு. க. ஸ்டாலின், ம. தி. மு. க. பொதுச் செயலர் வைகோ மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்டவர்கள் வாழ்த்திப் பேசினர்.

அவர்களின் வாழ்த்துக்கு பின்னர் உரையாற்றிய நல்லகண்ணு,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தொடக்க நாளை கொண்டாடும் வகையிலும் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. எனக்கு நேரில் வந்து வாழ்த்து தெரிவித்த அனைவருக்கும் நன்றி. பரிபூரண சுதந்திரம் என்பது குறித்து முதலில் பேசிய பெருமை கம்யூனிஸ்ட் இயக்கத்தை சேரும். சுதந்திரம் பெற்ற இந்த நாட்டை பாதுகாக்க வேண்டும் என்றால் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் இருக்க வேண்டும். போராடி பெற்ற இந்த சுதந்திரத்தை மத்திய அரசு மதத்தை வைத்து சீரழிக்க முயற்சிக்கிறார்கள், அதை எதிர்த்து ஒன்றுபட்டு முயற்சிக்க வேண்டும். மத வெறி கொண்ட சக்திகள் ஆட்சிக்கு வந்து விடக் கூடாது” - என்றார். (ஐ)

# மக்களை மையப்படுத்தியே வரலாற்றை எழுதவேண்டும்!



## முதலமைச்சர் ஸ்டாலின்

சென்னை, டிசெ. 28

பொய் வரலாறுகளை புறந்தள்ளி மக்களை மையப்படுத்தி வரலாறுகள் எழுதப்பட வேண்டும் என முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னை கிழக்கு தாம்பரத்தில் உள்ள கிறிஸ்துவ கல்லூரியில், இந்திய வரலாற்று பேரவையின் 81ஆவது மாநாட்டில் பேசிய அவர்,

அரசமைப்பு சட்டத்தின் அடிப்படைகள் மீறப்படுவதை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது என தெரிவித்தார். மதவாதக் கட்சியாக ஒரு கட்சி செயல்படுவதை அனுமதிக்க முடியாது.

வரலாற்று உணர்வுகளை ஊட்டுவது இன்றைய காலத்தின் தேவை எனவும் அவர் குறிப்பிட்டார்.

கற்பனையாகக் கூறப்படும் வரலாற்றை நம்பி ஏமாந்துவிடக் கூடாது. பொய் வரலாறுகளை புறந்தள்ளி மக்களை மையப்படுத்தி வரலாறுகள் எழுதப்பட வேண்டும் என்றார். கீழடியில் மிகப் பெரிய அருங்காட்சியகம் திறக்கப்படவுள்ளது. உண்மையான வரலாற்றை மக்களிடம் கொண்டு சேர்ப்பதே அரசின் கடமை - என்றார். (ஐ)

# இரு ரயில் பெட்டிகளுக்கு நடுவே சிக்கிய இளைஞர்

கொழும்பு, டிசெ. 28

மருதானையிலிருந்து பெலியத்த நோக்கி பயணித்த தொடரூந்தில் அக்குரஸ்ஸ நோக்கிப் பயணித்த இளைஞர் ஒருவர் இரண்டு ரயில் பெட்டிகளுக்கு நடுவே சிக்கியிருந்த நிலையில் மீட்கப்பட்டு பலப்பிட்டிய ஆதார வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டார்.

ரயில் பெட்டிகளுக்கு நடுவே இளைஞர் சிக்கியிருப்பதை கண்டு, சக பயணிகள் ரயிலை நிறுத்தி, காயங்களுடன் இளைஞரை மீட்டுள்ளனர்.

இதனையடுத்து அவர் அம்புலன்ஸ் மூலமாக பலப்பிட்டிய ரயில் நிலையத்திலிருந்து வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக ரயில் நிலைய தரப்பினர் தெரிவித்தனர்.

அக்குரஸ்ஸை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# முட்டைக்கு புதிய விலை



கொழும்பு, டிசெ. 28

சந்தையில் முட்டையின் விலை வேகமாக அதிகரித்து வருவது தொடர்பில் விவசாய அமைச்சர் மற்றும் முட்டை உற்பத்தியாளர் சங்கங்களுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று முன் தினம் காலை விவசாய அமைச்சில் இடம்பெற்றது.

இந்நிலையில் குறித்த கலந்துரையாடலில் எதிர்வரும் 29ஆம் திகதி முதல் நுகர்வோருக்கு 55 ரூபாவை விட குறைவான விலையில் முட்டையை வழங்க முட்டை உற்பத்தியாளர் சங்கங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# அதிகளவு இந்திய மருந்துகளை அனுமதியின்றி வாங்க முயற்சி!

## மருத்துவர் தொழிற்சங்க கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.28

**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அனுமதியின்றி அதிகமான இந்திய மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுவதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**

இந்த விடயம் தொடர்பில் விசேட விசாரணையொன்றை முன்னெடுக்க வேண்டுமென ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதைய அந்நியச் செலாவணி நெருக்கடியின் காரணமாக, நாட்டிற்கு தேவையான மருந்துகளை தட்டுப்பாடின்றி இறக்குமதி செய்வதில் அரசாங்கம் சிக்கலை எதிர்கொண்டுள்ளது.

நிலவும் மருந்துப் பற்றாக் குறைக்கு தீர்வாக அவசரமாக மருந்துக் கொள்வனவு செய்வது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை கடந்த ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர்

கெஹலிய ரம்புக்வெல அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

45 நாட்களுக்குள் இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் அமைந்துள்ள சேவரிற் தனியார் மருந்து உற்பத்தி நிறுவனம் 3 மாதங்களுக்குத் தேவையான மருத்துப் பொருட்களை இலங்கைக்கு வழங்க இணங்கியுள்ளதாக அந்த அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதற்கமைய, இந்தியக் கடன் திட்டத்தில் எஞ்சியுள்ள நிதி மற்றும் வேறு நிதியை பயன்படுத்தி அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் அனுமதியுடன் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய மருந்துகள் ஒழுங்கு படுத்தல் அதிகார சபையின் அனுமதியின்றி 28 வகையான மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவை பிழையாக வழிநடத்தி தேசிய மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் அனுமதி இருப்பதாகக் கூறி குறித்த மருந்துகளை இறக்குமதி செய்ய முயற்சித்துள்ளதாகவும் அவற்றில் 12 மருந்துகள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அதேநேரம் 03 வகையான மருந்துகள் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படுவதாகவும் முன்னிலை சோசலிச கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்தார்.

இதனிடையே, கௌசிக் என்ற மற்றொரு இந்திய நிறுவனத்திடமிருந்து இது தொடர்பான அவசர கொள்முதல் தொடர்பான மற்றுமொரு அமைச்சரவை பத்திரத்தை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய மருந்துகள் ஒழுங்கு படுத்தல் அதிகார சபையின் நிறைவேற்று பணிப்பாளருடன் இந்தியாவில் இருப்பதாக கடந்த 22 ஆம் திகதி சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தமது ருவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தமது பயணத்திற்காக அரசாங்கத்தின் பணம் செலவிடப்படவில்லை எனவும் தனிப்பட்ட பணத்திலேயே இந்தியாவுக்கு சென்றுள்ளதாகவும் அமைச்சரின் ருவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# வாகனத்திலிருந்து குதித்த 15 வயது மாணவி மரணம்!

முல்லைத்தீவு, டிசெ. 28

முல்லைத்தீவு-மாஞ்சோலைப் பகுதியில் வாகனத்தில் இருந்து குதித்து விபத்துக்குள்ளாகிப் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த மாணவி உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு முறிப்பை சேர்ந்த 15 வயது மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த 23ஆம் திகதி முறிப்பில் இருந்து பாடசாலை நிகழ்வுக்காக மாஞ்சோலை செல்வதற்காக வாகனமொன்றை மறித்து, மாணவன் ஒருவரும், மாணவியொருவரும் ஏறியுள்ளனர்.

மாணவர்கள் இறங்கவேண்டிய இடம் வந்தும் வாகனம் நிற்காமல் சென்றுள்ளது.

இந்த நிலையில் நீராவிப்பிட்டி முதன்மை வீதியில் வாகனம் பயணித்துக் கொண்டிருக்கும்போது வாகனத்தில் இருந்து மாணவி குதித்துள்ளார். அதனைத் தொடர்ந்து மாணவனும் வாகனத்தில் இருந்து குதித்துள்ளார்.

மாணவர்கள் வாகனத்தில் இருந்து குதித்ததுகூட தெரியாத நிலையில் வாகனத்தின் சாரதி வாகனத்தை ஓட்டிச் சென்றுள்ளார்.

இந்த விபத்தில் தலையில் படுகாயமடைந்த முறிப்பு பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய மாணவி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, சிகிச்சை பலனின்றி மீண்டும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த விபத்து சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# இணையவழி ஊடாக ஈ.ரி.எவ் செலுத்தும் முறை பெப்ரவரியில்

கொழும்பு, டிசெ. 28

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் இணைய (ஒன்லைன்) வழியாக மாத்திரமே ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான (ஈ.ரி.எவ்) பங்களிப்புகளை தொழில்தருநர்கள் செலுத்த வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

15 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணி புரியும் நிறுவனங்களின் தொழில்தருநர்கள் உரிய கட்டணத்தைச் செலுத்தல் மற்றும் மாதாந்திர அறிக்கைகளை சமர்ப்பித்தல் என்பவற்றை இணைய வழியாக மேற்கொள்ளவேண்டும் என அவர் கூறினார்.



இதனூடாக பணியிடத்தில் இருந்து பங்களிப்புகளை இலகுவாகச் செலுத்த முடியும் எனவும், நிறுவனத்தினால் பங்களிப்புகள் முறையாக செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும் ஊழியர்கள் உறுதிப்படுத்த முடியும் எனவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் குறிப்பிட்டார். (அ)



# புகையிலை, மதுப் பாவனை தினசரி 110 இலங்கையர்களை கொல்கிறது!

## மதுபானம் குறித்த தேசிய அதிகார சபை தலைவர் சமாதி ராஜபக்ஷ தகவல்

கொழும்பு, டிசெ. 28

புகையிலை மற்றும் மதுபான பாவனையால் இலங்கையில் நாளொன்றுக்கு 110 பேர் உயிரிழப்பதாக புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் கலாநிதி சமாதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

புகைபிடித்தல் மற்றும் புகையிலை பாவனையால் வருடாந்தம் 40,000 பேர் உயிரிழப்பதாக தெரிவித்த அவர், இதனால் இறப்பவர்களின் மனைவிகள், பெற்றோர்கள், பிள்ளைகள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் கூறினார்.

2020 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முன்வைக்கப்பட்ட புகையிலை வரிச் சூத்திரத்தை நடைமுறைப்படுத்தினால், இறப்பு எண்ணிக்கையை குறைத்து, அரசாங்கத்திற்கு தேவையான 11 பில்லியன் ரூபாவை சம்பாதிக்க முடியும் என்றும் அவர் கூறினார். (அ)

# தீர்வு குறித்து ரணிலின் கருத்து கேலிக்குரியது

## சொல்கிறார் ஆனந்தசங்கரி



கிளிநொச்சி, டிசெ. 28

75 ஆண்டுகளாக தீர்த்து வைக்க முடியாத இனப் பிரச்சனையை எதிர் வரும் பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னதாக தீர்த்துவைக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளமை கேலிக்குரியது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியல்வாதிகளில் வயதில் முதிர்ச்சியடைந்த என்னிடம் இது தொடர்பில் புதிய சிந்தனைகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடவில்லை எனவும் குற்றம் சுமத்தினார். அன்று பாராளுமன்றத்தில் மகிந்த ராஜபக்ஷ ஒற்றை ஆட்சியையும் ரணில் விக்கிரமசிங்க சமஷ்டி யையும் முன்வைத்தனர்.

அவ்வாறாக போர் நிலவிய நேரத்தில் சம்மந்தனும் திருட்டு தனமாக பாராளுமன்றம் சென்ற 22 பேரும் மக்களிடம் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு பிரசாரம் செய்தனர். இதனால் ரணில் தோற்றார். அவர்களை நம்பி மக்களும் வாக்களித்தனர். சமஷ்டியை செல்லா காசாக்கினார்கள்.

அன்று சமஷ்டி வேண்டாம் என்று பிரசாரம் செய்த அரசியல் தலைவர்கள், இன்று நானா நீயா என்று போட்டி போடுகிறார்கள்.

2004 ஆம் ஆண்டு தேர்தலில் விடுதலை புலிகளையும் உள்ளடக்கியதாக அனைவரும் ஒன்றாக செயற்பட வேண்டும் என்று உதய சூரியன் கொடி கேட்டு கொண்டது. ஆனால் சம்பந்தன் பிரபாகரனை ஒரு பக்கமாகவும் தானும் சேனாதிராசாவும் தமிழ்ச்செல்வனோடும் இணைந்தனர்.

எம் இனத்தை காட்டி குடுத்த சம்மந்தன் 2004 ஆம் ஆண்டு சட்டவிரோதமாக பாராளுமன்றத்துக்கு சென்றவர், பாராளுமன்றத்தில் இருக்க தகுதி அற்றவர். இந்த பிரச்சினை பற்றிய கதைகளை நிறுத்துங்கள் கதைத்து ஒன்றும் ஆகபோவதில்லை-என்றார். (அ)

# 1,955 வெளிநாட்டவர்கள் நாடு கடத்தப்பட்டனர்!

கொழும்பு, டிசெ. 28

கடந்த நான்கு வருடங்களில் குற்றங்கள் மற்றும் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஆயிரத்து 955 வெளிநாட்டவர்கள் இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளதாக குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவர்களில் அதிகமாக 898 பேர் 2019ஆம் ஆண்டில் வெளியேற்றப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. அத்துடன், 2018 ஆம் ஆண்டு 678 வெளிநாட்டவர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

2020ஆம் ஆண்டில் 249 வெளிநாட்டவர்களும், 2021ஆம் ஆண்டில் 130 பேரும் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளதாக குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடு கடத்தப்பட்ட வெளிநாட்டவர்களில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் இந்தியர்கள் எனவும் கூறப்படுகின்றது.

குடிவரவுத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, நேபாளம், நைஜீரியா, பாகிஸ்தான், ரஷ்யா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் பிரஜைகளும் வெளியேற்றப்பட்டுள்ளனர். (அ)

# கண்டி நகர் வெள்ளத்தில் மூழ்கக் காரணம் என்ன?

கொழும்பு, டிசெ. 28

கண்டி ரயில் நிலையம் உள்ளடங்கலாக நகரின் சில இடங்கள் வெள்ளத்தில் மூழ்குவதற்கு வடிகால் அமைப்பு முறையாக பராமரிக்கப்படாமையே காரணம் என எதிர்கட்சியின் பிரதம அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அண்மையில் பெய்த அடை மழை காரணமாக கண்டி மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக கண்டி ரயில் நிலையம், மத்திய மாகாண கல்வி திணைக்களக் கட்டடம் மற்றும் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

இது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (அ)

# இரட்டைக் குடியுரிமை பெற பெருமளவு விண்ணப்பங்கள்

கொழும்பு, டிசெ. 28

2021 ஆம் ஆண்டில் 5,401 பேர் இரட்டைக் குடியுரிமையைப் பெறுவதற்கான கோரிக்கைகளை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திடம் சமர்ப்பித்துள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் அவுஸ்திரேலியாவில் வசிப்பதாகவும், அவர்களின் எண்ணிக்கை 1,621 எனவும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த 885 பேரும், அமெரிக்காவைச் சேர்ந்த 795 பேரும், கனடாவைச் சேர்ந்த 371 பேர் உட்பட இத்தாலி, சுவிட்சர்லாந்து, சுவீடன், நியூசிலாந்து, பிரான்ஸ் மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளில் இருந்து இரட்டைக் குடியுரிமை கோரி விண்ணப்பித்துள்ளனர்.

இதன்படி, குறித்த நபர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (அ)

# மின் கட்டண உயர்வு குறித்து விசேட விசாரணை ஆரம்பம்



கொழும்பு, டிசெ. 28

மின் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விசேட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் வெளியான ஊடக தகவல்களை மையப்படுத்தி இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் மின் கட்டணம் அதிகரித்துள்ளதால் மனித உரிமை மீறப்பட்டுள்ளதா? இல்லையா என்பது தொடர்பில் ஆராய்வதே இந்த ஆணைக்குழுவின் நோக்கம் என அதன் ஆணையாளர் நிமல் கருணாசிறி தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபை மற்றும் அதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் உரிய வகையில் கடமைகளை நிறைவேற்றியுள்ளனரா என்பது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

குறித்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் இரண்டாம் கட்டம் இந்த வாரம் தொடரவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விசாரணைகளை விரைவில் நிறைவுறுத்தி அது தொடர்பில் முழுமையான அறிக்கையை வெளியிட எதிர்பார்ப்பதாக மனித உரிமைகள் ஆணையாளர் நிமல் கருணாசிறி தெரிவித்தார். (அ)

# 30 ஆயிரம் அரச ஊழியர்கள் ஜனவரியில் ஓய்வு பெறுவர்!

கொழும்பு, டிசெ. 28

இந்த வருடத்தின் இறுதியில் சுமார் 30 ஆயிரம் அரச ஊழியர்கள் ஓய்வு பெறவுள்ளனர்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர இதனைத் தெரிவித்தார்.

கடந்த வருடம் மற்றும் இந்த வருடத்தில் 60 வயது பூர்த்தியாகிய அரச ஊழியர்களே இவ்வாறு ஓய்வு பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அரச ஊழியர்களை சமநிலைப் படுத்துவதற்கான பிரதமரின் செயலாளரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# சுதந்திர கட்சியின் கூட்டணியில் கூட்டுத் தலைமைக்கு இணக்கம்!

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அழைப்பின்பேரில் அமைக்கப்படவுள்ள புதிய அரசியல் கூட்டணிக்கு தலைமைத்துவ சபை ஒன்றை அமைப்பதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது என்று அறிய வருகின்றது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியை அடிப்படையாகக் கொண்டு கூட்டணி ஒன்றை உருவாக்குவது தொடர்பான பேச்சு வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது. ஆனால், இது புதிய கூட்டணி என்பதால் புதிய தலைவர் நியமிக்கப்பட வேண்டும் என்று பேச்சின்போது மற்றைய கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில், சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன மீது ஈஸ்டர் தாக்குதல்கள் மற்றும் பல குற்றச்சாட்டுகள் உள்ளன. எனவே, கூட்டணியின் தலைவராக புதிய வரை நியமிக்க வேண்டும் என்பதே டலஸ் அணியின் முன்மொழிவாக இருந்தது.

இது தொடர்பில் பல சுற்று கலந்துரையாடல்களுக்குப் பின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் நல்ல பதிலை வழங்கியதாகக் கூறப்படுகின்றது. இதன்படி சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரி செயல்படும் வேளையில் உருவாக்கப்படும் புதிய கூட்டணிக்கு தலைமைத்துவ சபையொன்றை நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஐ- சி)

# மன்னாரில் தொழிலுக்கு சென்ற 2 மீனவர்களை காணவில்லை

மன்னார், டிசெ. 28

மன்னார்-சிலாவத்துறை பகுதியிலிருந்து கடற்றொழிலுக்கு சென்ற இரு மீனவர்கள் காணாமல்போயுள்ளனர்.

கடந்த 24ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்ற, சிலாவத்துறை பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 23 வயதான இரண்டு மீனவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. காணாமல்போன மீனவர்களை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கடற்றொழில் திணைக்களம் கூறியுள்ளது. (அ)

# இலங்கை-இந்திய விமான சேவையை விரிவாக்குவதற்கு 2 நாடுகளும் பேச்சு



புதுடில்லி, டிசெ. 28

இந்தியாவுக்கான இலங்கைத் தூது வர் மிலிந்த மொறகொட, இண்டிகோ விமான நிறுவுநர் மற்றும் முகாமைத் துவப் பணிப்பாளர் ராகுல் பாட்டி யாவைச் சந்தித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான விமானப் போக்குவ ரத்துத்துறையில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான வழிகள் மற்றும் இலங்கை விமான நிலையங்களை இந்திய விமான நிறுவனங்களுக்கு அதிக போட்டித்தன்மை கொண்டதாக மாற் றுவதற்கான வழிகள் குறித்து அவர்கள் விவாதித்தனர்.

வோஸ்ட்ரோ கணக்குகளை அனு மதிக்க இந்திய ரிசர்வ் வங்கி சமீபத்தில் வழங்கிய அனுமதியின் வாய்ப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இண்டிகோ இந்தியாவின் மிகப் பெரிய விமான நிறுவனமாகும். இது இந்தியாவில் குறைந்த கட்டண விமா னப் போக்குவரத்துக்கு முன்னோடியாக உள்ளது. நவம்பர் 2022 நிலவரப்படி இந்த விமான நிறுவனத்தின் ஊடாக 300 மில்லியனுக்கும் அதிகமான பயணிகள் பயணித்துள்ளனர்.

இன்டிகோ தற்போது சென்னை மற்றும் கொழும்பு இடையே திட்டமிடப்பட்ட விமா னங்களை இயக்குகிறது. மேலும் இலங்கையின் மிகப் பெரிய மூலதனச் சந்தையாக இந்தியாவில் இருந்து சுற்றுலா போக்குவரத்தின் குறிப்பிடத்தக்க பகுதியை கொண்டு செல்கிறது.

இலங்கையின் பொருளாதார மீட் சியில் இந்தியாவின் சுற்றுலா முக்கிய பங்கு வகிக்கும். இலங்கை வங்கிகளால் வோஸ்ட்ரோ கணக்குகளை திறக்க இந் திய ரிசர்வ் வங்கியின் சமீபத்திய ஒப்புதல் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையி லான ரூபாய் அடிப்படையிலான வர்த்த கத்தை மேம்படுத்துவதற்கான முதல் படியாகும். (அ)

## தேங்காய் விலை உயர்வு



கொழும்பு, டிசெ. 28

அதிகரித்துள்ள தேங்காய் விலை அடுத்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களி லும் தொடரலாம் என சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின் றன.

தற்போது சந்தையில் தேங்காய் ஒன்று 120 முதல் 130 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது தேங்காய் தொடர்பான ஏனைய பொருட்களுக்கான தேவை மற்றும் கொப்பரையின் பயன்பாடு அதிகரித்துள்ள மையே தேங்காயின் விலை அதிகரிப்புக்கு வழிவகுத்துள் ளதாக தெரிவிக்கப்படுகின் றது. (அ)

## நுரைச்சோலைக்கு நிலக்கரி விநியோகம் அத்தியாவசியம்

கொழும்பு, டிசெ. 28

நுரைச்சோலை நிலக்கரி ஆலைக்கு தேவையான நிலக் கரி விநியோகம் தற்போது நெருக்கடியான சூழ்நிலையில் இருப்பதாக ஆலையின் கட்டுப் பாட்டு அதிகாரசபை கூறுகி றது.

அடுத்த மாதம் 6 ஆம் திகதி வரை ஆலையில் இரண்டு ஜெனரேற்றர்களை இயக்குவ தற்கு தேவையான கிட்டத்தட்ட 72,000 மெற்றிக்தொன் நிலக் கரி ஆலையில் இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டு கின்றனர்.

ஆனால், அடுத்த சில நாட்களில் அனல்மின் நிலை யத்தை இயக்க முடிந்தாலும், தேவையான நிலக்கரியை வழங்க முடியாவிட்டால், எந்த வகையிலும் ஆலையை இயக்க முடியாது என்கின்றனர்.

தற்போது ஆலைக்குச் சொந்தமான இரண்டாவது இயந்திரமும் கடந்த இருபத்தி இரண்டாம் திகதியில் இருந்து சேவையில் இருந்து அகற்றப் பட்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (அ)

## உணவுப் பண வீக்கத்தில் இலங்கை 7ஆவது இடத்தில்

கொழும்பு, டிசெ. 28

உணவுப் பாதுகாப்பு தர வரிசையின் சமீபத்திய புதுப் பிப்பை உலக வங்கி வெளி யிட்டுள்ளது.

இதன்படி, பெயரளவி லான உணவு விலை பணவீக்க பட்டியலில் இலங்கை 7 ஆவது இடத்தை எட்டியுள் ளது. அதன் மதிப்பு 74 சத வீதமாக உள்ளது.

இந்த பணவீக்க அட்டவ ணையில் சிம்பாப்பே முதல் இடத்தை அடைந்துள்ளது, அதன் மதிப்பு 321 சதவீதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.(அ)

## 20,000 படையினருக்கு அரசு பொதுமன்னிப்பு

கொழும்பு, டிசெ. 28

இலங்கை அரசாங்கம் அண் மையில் அறிவித்த பொது மன் னிப்பு காலத்தின்போது இரா ணுவத்தை விட்டு வெளியேறிய சுமார் 20,000 பாதுகாப்புப் படையினர் உத்தியோகபூர் வமாக சேவையிலிருந்து நீக் கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மிக நீண்ட காலமாக விடு முறையை அறிவிக்காமல் கட மைக்கு சமூகமளிக்காத இரா ணுவ உறுப்பினர்களுக்கு வழங் கப்பட்ட இந்த பொது மன் னிப்பு காலம் 2022 நவம்பர் 15 முதல் டிசெம்பர் 31 வரை அமுலில் இருக்கும்.

"அவர்களில் 19,000ற்கும் அதிகமானோர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்" என பாதுகாப்பு அமைச்சின் ஊடப் பேச்சாளர் கேர்ணல் நலின் ஹேரத் பி.ரி.ஐ செய்தி நிறுவ னத்திடம் தெரிவித்துள்ளார்.

அவர்களின் சேவைப் பொறுப்புகளை உரிய முறை யில் ஒப்படைப்பதற்கான நடை முறைகளை உரிய முறையில் பூர்த்தி செய்ததன் பின்னர், அவர்கள் அனைவரையும் சட்டரீதியாக பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுத் துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

17,322 இராணுவத்தினரும், 1,145 கடற்படையினரும், 1,038 விமானப்படையினரும் பணி நீக்கம் செய்யப்பட்டுள் ளதாக கேணல் ஹேரத் தெரி வித்துள்ளார். விடுமுறை எடுக்காமல் முப்படைகளிலும் பணிக்கு சமூகமளிக்காதவர் களே இவர்கள்.

வரவு-செலவுத் திட்ட ஒதுக் கீட்டில் ஒவ்வொரு வருடமும் பாதுகாப்புச் செலவுகள் அதிக ரித்து வரும் சூழ்நிலையில், 200,000 இற்கும் அதிகமான சிப்பாய்களைக் கொண்ட இலங்கையின் இராணுவத்தை இலங்கை தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் இருப்ப தாக குறிப்பிடப்படுகின்றது.

அந்நியச் செலாவணி குறைந்து மிக மோசமான பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இலங்கை கடுமை யாக முயற்சித்து வரும் நிலையி லேயே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அண்மையில் நிறைவேற்றப் பட்ட 2023 வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு மற் றும் பொது பாதுகாப்பு அமைச் சுகளுக்கு 539 பில்லியன் ரூபாவும், சுகாதாரத்திற்காக 322 பில்லியன் ரூபாவும், கல்விக்காக 232 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் நாட்டின் வடக்கு மற் றும் கிழக்கு மாகாணங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளுட னான இராணுவ மோதல் முடி வுக்கு வந்த நிலையில், இலங்கை இராணுவம் நகர திட்டமிடல் மற்றும் கட்டுமானத் துறைகள் போன்ற பிற நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு, வடக்கு-கிழக் கில் வணிக நடவடிக்கைகளி லும் ஈடுபட்டுள்ளது.

எனினும், ஒரு இராணுவ சிப்பாய் ஓய்வூதியம் பெறுவ தற்கு 22 வருடங்கள் சேவை யில் இருக்க வேண்டும் எனி னும், 12 ஆண்டுகள் பணியாற் றிய பின்னர் சட்டபூர்வமாக ஓய்வூதியம் இல்லாமல் வெளி யேறுவதற்கு அவர்களுக்கு முடி யும். (அ)

## புதிய மின் இணைப்புக்காக 35,000 பேர் காத்திருக்கின்றனர்

வாடிக்கையாளர்களுக்கு புதிய மின்சார இணைப்புகளை வழங்குவதில் சற்று தாமதம் ஏற் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக புதிய இணைப்புகளை வழங்குவதற்கு தேவையான மின்சார மீற்றர் கள் உள்ளிட்ட பல உபகரணங் களை இறக்குமதி செய்ய முடி யாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

புதிய இணைப்புகளைப் பெறுவதற்காக தற்போது 35,000 பேர் காத்திருப்போர் பட்டிய லில் இருப்பதாக இலங்கை மின் சார சபையின் சிரேஷ்ட பேச்சா ளர் ஒருவர் தெரிவித்தார்.

எனினும் எதிர்வரும் 3 மாதங் களில் இவர்களுக்கு புதிய இணைப்புக்கள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

தற்போது இலங்கை மின்சார சபைக்கு மாதாந்தம் 250 மின் மாற்றிகள் தேவைப்படுகின்றன. ஆனால் தற்போதைய டொலர் நெருக்கடியை கருத்தில் கொண்டு மாதாந்தம் சுமார் 100ஐ பெற்றுக்கொள்ள முடி யும் என மேலும் தெரிவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 230 கோடி ரூபாவுக்கும் அதிகமான நட்டத்தை சந்தித்துள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

கொழும்பு, டிசெ. 28

2014 முதல் 2020 வரையிலான காலகட்டத்தில் பெற்றோலியம் கூட் டுத்தாபனம் 230 கோடி ரூபாய்க்கும் அதிகமான நட்டத்தைச் சந்தித்துள் ளதாக தேசிய தணிக்கை அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதாந்த பயன்பாட்டுக் கட்ட ணத்தை அதிக எண்ணிக்கையிலான நிரப்பு நிலையங்களில் இருந்து வசூலிக்கத் தவறியமையே இதற்குக் காரணம் எனவும் தெரிவித்துள்ளது.

இந்த காலப்பகுதியில் 11 பெற்றோல் நிலையங்களில் மட்டுமே மாதாந்திர பயன்பாட்டுக் கட்டணம் வசூலிக்கப் பட்டுள்ளமையும் அறிக்கையில் தெரியவந்துள்ளது.

கடனை தீர்ப்பதில் தாமதம் ஜனவரி 1, 2014 முதல் மாநகராட்சிக்கு சொந்தமான நிரப்பு நிலையங்கள் மற்றும் கருவூலத்திற்கு சொந்தமான நிரப்பு நிலையங்கள் ஆகியவற்றிலிருந்து மாதாந்திர பயன் பாட்டுக் கட்டணத்தை வசூலிக்க அப் போதைய இயக்குநர்கள் குழு முடிவு செய்துள்ளது.

இருப்பினும், கடந்த கால கணக்காய்வு அறிக்கைகளில் பல உண்மைகள் கூறப்பட்டபோதிலும், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து இந்தக் கட்டணங்களை வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக் கப்படவில்லை எனவும்,இது தொடர் பில் எவ்வித திருத்தமும் மேற்கொள் ளப்படவில்லை எனவும் கணக்காய்வு அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ள னர்.

இதற்கிடையில், அந்நியச் செலா வணி கடனைத் தீர்ப்பதில் தாமதம் ஏற்பட்டதால், 2020 ஆம் ஆண்டில் கூடுதல் வட்டிச் செலவாக 70 கோடி ரூபாயை மாநகராட்சி ஏற்க வேண்டியி ருந்தது என்று கணக்காய்வு அறிக்கை மேலும் கூறுகின்றது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் இந்த தகவல் குறிப்பிடப் பட்டுள்ளது. (அ)

# இராணுவத்தில் மகன் - புரட்சிக் குழுவில் தந்தை:

## மியன்மாரில் ஒரு பாசப் போராட்டம்!

**ரெபேக்கா ஹென்ஸ்கே**

மியான்மரில் ஜனநாயக பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக கடந்த 2021ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ராணுவ புரட்சி வெடித்ததையடுத்து, ஓர் ஆயுத குழுவில் போ கியார் யெய்ன் இணைந்தார்.

அதைத் தொடர்ந்து நடந்த கொடூரமான உள்நாட்டுப் போர் அவரது குடும்பத்தைப் பிளவுபடுத்தியது. போ கியார் யெய்ன் இப்போது அவரது மகன் ராணுவ வீரனாக இருக்கும் ராணுவ ஆட்சிக்கு எதிராக போராடி வருகிறார்.

"உன்னை நினைத்து கவலைப்படுகிறேன். தந்தை என்பதால் நீ எனக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கலாம், ஆனால் நான் நிச்சயம் உன்னை விட மாட்டேன்"- காட்டில் ஓர் ஆலமரத்தின் கீழ் அமர்ந்து தனது மகன் நியி நியி-விடம் தொலைபேசியில் இவ்வாறு பேசிக் கொண்டிருந்தார் போ கியார் யெய்ன்.

"நானும் உங்களை நினைத்து கவலைப்படுகிறேன் அப்பா. ஒரு ராணுவ வீரன் ஆக வேண்டும் என என்னை ஊக்குவித்தது நீங்கள்தான்" என மறுமுனையில் இருந்து பதில் வருகிறது.

போ கியார் யெய்னின் இரண்டு மகன்கள் ராணுவத்தில் உள்ளனர். மூத்த மகன் அவரது அழைப்புகளுக்கு பதிலளிப்பது இல்லை.

"ராணுவம் வீடுகளை அழித்துவிட்டன. அவற்றுக்கு தீ வைத்துவிட்டன" என்று கூறும் போ கியார் யெய்ன், தனது மகனை ராணுவத்தில் இருந்து வெளியேறுமாறு கேட்டுக்கொள்கிறார். 'ராணுவம் மக்களைக் கொல்கிறது, போராட்டக்காரர்களை அநியாயமாக சுடுகிறது, காரணமின்றி குழந்தைகளைக் கொல்கிறது, பெண்களை பாலியல் பலாத்காரம் செய்கிறது. அது உனக்கு தெரியாமல் இருக்கலாம்" என்று மகனிடம் கூறுகிறார்.

"அது உங்களின் பார்வையாக இருக்கலாம் அப்பா. நாங்கள் அப்படி பார்ப்பதில்லை" என்று தனது தந்தையின் குற்றச்சாட்டுக்கு மறுப்பு பதிலளிக்கிறார் நியி நியி. இத்தகைய மறுப்புகள் இருந்தபோதிலும், ராணுவத்தின் அட்டூழியங்கள் பரவலாகவும் நன்கு ஆவணப்படுத்தப்பட்டவையாகவும் உள்ளன.

இரண்டு மகன்களையும் சமாதானம் செய்ய தான் முயற்சிப்பதாகவும், அவர்கள் கேட்பதில்லை என்றும் கூறும் போ கியார் யெய்ன், "போரில் நாங்கள் சந்தித்துக்கொள்வது என்பது விதியின் வசம் உள்ளது" என்று தெரிவிக்கிறார்.

"கையளவு உள்ள காய்கறிகளில், இரண்டு அல்லது மூன்று சரியில்லா தவையாக உள்ளன. ஒரு குடும்பத்திலும் அப்படித்தான். சிலர் நல்லவர்களாக இல்லாமல் இருக்கலாம்" என்கிறார் அவர்.

போ கியார் யெய்ன் மற்றும் அவரது மனைவியின் யின் மைன்ட் ஆகியோருக்கு மொத்தம் எட்டு குழந்தைகள், அவர்களில் இரண்டு பேர் ராணுவத்துக்கு தேர்வு செய்யப்பட்டதில் அவர்கள் பெருமிதம் அடைந்தனர். மகன்களின் இராணுவ பட்டமளிப்பு விழாவின் புகைப்படங்களை போ கியார் யெய்ன் நினைவுச்சின்னமாக வைத்திருந்தார். இரண்டு மகன்களும் அதிகாரிகள் ஆனார்கள்.

மகன்கள் ராணுவ வீரர்களாக இருந்தது பெருமையாக இருந்ததாக கூறுகிறார் அவர். மத்திய மியான்மரின் இந்தப் பகுதியில்





உள்ள மக்கள் தங்கள் கிராமங்களுக்குள் இராணுவத்தை மலர்கள் கொடுத்து வரவேற்ற காலம் அது.

யின் யின் மைன்ட் கூறுகையில், முழுக் குடும்பமும் வயல்களில் வேலை செய்து பணம் சம்பாதித்ததால் இரண்டு மகன்களும் படித்து ராணுவத்தில் சேர முடிந்தது என்றார்.

உள்நாட்டுப் போருக்கு முன்பு, மியான்மரின் ஆயுதப் படைகள் என அழைக்கப்படும் டாட்மடாவில் வேலை பார்ப்பது என்பது குடும்பத்திற்கு உயர்ந்த சமூக மற்றும் பொருளாதார நிலையைக் கொண்டுவரக் கூடியதாக இருந்தது. ஆனால் கடந்த ஆண்டு நிகழ்ந்த ஆட்சிக்கவிழ்ப்பு எல்லாவற்றையும் மாற்றிவிட்டது.

நிராயுதபாணியான ஜனநாயக சார்பு எதிர்ப்பாளர்களை ராணுவம் இரக்கமின்றி ஒடுக்குவதை போ கியார் யெய்ன் பார்த்தபோது, அவர் இனி அவர்களுக்கு ஆதரவளிக்க முடியாது என்று முடிவு செய்த தோடு, தனது மகன்களை ராணுவத்தை விட்டு வெளியேறுமாறு வலியுறுத்தினார்.

'ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை ஏன் சுட்டுக் கொன்றார்கள்? ஏன் சித்ரவதை செய்தார்கள்? ஏன் காரணமின்றி மக்களைக் கொல்கிறார்கள்?" காட்டில் தனது முகாமில் வெற்றிலை பாக்கை மென்றபடி போ கியார் யெய்ன் கேட்கிறார். இவை அனைத்தாலும் தான் மனம் நொறுங்கிவிட்டதாக அவர் கூறுகிறார்.

இராணுவப் புரட்சிக்கு முன், போ கியார் யெய்ன் ஒரு விவசாயி, அவர் துப்பாக்கி ஏந்தியதில்லை. இப்போது, அவர் ஒரு போராட்டப் பிரிவின் தலைவர். அவர்கள் மக்கள் பாதுகாப்புப் படைகள் (PDF) எனப்படும் இயக்கத்தின் ஒரு பகுதியாக உள்ளனர், அவர்கள் மிகப் பெரிய மற்றும் சிறந்த ஆயுதம் கொண்ட ராணுவத்திற்கு எதிராக ஜனநாயகத்தை மீட்டெடுக்க போராடி வருகின்றனர்.

ராணுவ வீரர்களை நாய்கள் என இழிவாக குறிப்பிடும் அவர், 'ஒரு கிராமத்திற்கு நாய்கள் வரும்போது, அவர்கள் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்கிறார்கள், அவர்கள் வீடுகளை எரிக்கிறார்கள் மற்றும் சொத்துக்களை சூறையாடுகிறார்கள்... நாம் அவர்களுக்கு எதிராக நிற்க வேண்டும்," என்று போ கியார் யெய்ன் கூறுகிறார்.

தங்களை காட்டுப் புலிகள் என்று அழைக்கும் சுமார் 70 ஜனநாயக சார்பு போராளிகளைக் கொண்ட ஒரு பிரிவிற்கு போ கியார் யெய்ன் தலைமை தாங்குகிறார். அவர்களிடம் மூன்று தானியங்கி துப்பாக்கிகள் மட்டுமே உள்ளன.

அவருடைய மற்ற நான்கு மகன்களும் சண்டையில் அவருக்கு பக்க துணையாக உள்ளனர். ராணுவத்தில் உள்ள இரண்டு மகன்களும் அவர்களின் கிளர்ச்சியாளர் தளத்திலிருந்து 50 கிமீ (30 மைல்) தொலைவில் உள்ளனர்.

'ராணுவத்தில் உள்ள எங்களின் மகன்களை நம்பலாம் என்று நாங்கள் நினைத்தோம். ஆனால் இப்போது அவர்களே எங்களுக்கு சிக்கலாக மாறிவிட்டனர்" என்று யின் யின் மைன்ட் வேதனையுடன் கூறுகிறார்.

### மழையாக பொழிந்த துப்பாக்கி குண்டுகள்

பிப்ரவரி மாதத்தின் பிற்பகுதியில் ஒருநாள் அதிகாலை 3 மணியளவில், ராணுவம் தங்கள் மீது தாக்குதல் நடத்துவதாக அருகில் உள்ள கிராமத்தில் இருந்து போ கியார் யெய்ன் குழுவுக்கு தொலைபேசியில் அழைப்பு வந்தது. அப்போது எதிர் தரப்பில், 'எங்களுக்கு உதவி தேவை, நாய்கள் ஜசிப்பாய்கள் எங்கள் கிராமத்திற்குள் நுழைந்துவிட்டன, வந்து எங்களுக்கு உதவுங்கள்" என தெரிவிக்கப்பட்டது.

இரண்டாவது மகன் மின் ஆங் முதலில் புறப்படத் தயாரானான். அவனைத் தடுக்க முடியாது என்பதை அறிந்த அவனுடைய தாய், அவன் பத்திரமாகத்



திரும்ப வேண்டிக்கொண்டாள். காட்டுப் புலிகள் மோட்டார் சைக்கிள்களில் புறப்பட்டனர். தனது மகன் மின் ஆங்குடன் போ கியார் யெய்ன் படையை வழி நடத்தி சென்றார். முன்னொரு காலத்தில் அவர்கள் பதுங்கிருந்தபோது பாதுகாப்பாக இருந்த பாதை வழியாக அவர்கள் பயணம் மேற்கொண்டனர்.

'அங்கு ஒளிந்துகொள்ள எந்த இடமும் இல்லை. பெரிய மரங்களோ அல்லது எதுவுமே இல்லை" என்று தெரிவித்த மற்றொரு மகன் மின் நாயிங், "சோளத்தை பொரிப்பது போல் அவர்கள் எங்களை நோக்கி மளமளவென துப்பாக்கியால் சுட்டனர். நாங்கள் கொலைக்களத்தில் இருந்தோம். அவர்களின் ஆயுதங்களுக்கு எங்கள் ஆயுதங்களால் ஈடு கொடுக்க முடியவில்லை" என்று குறிப்பிடுகிறார்.

போ கியார் யெய்ன் தனது குழுவினரை பின்வாங்க உத்தரவிட்டார். அவர்கள் நெல் வரப்பில் ஒளிந்துகொண்டனர். "அவர்களில் யாரோ ஒருவர் என்னை அறிந்திருப்பதாக தோன்றியது" என்று கூறும் போ கியார் யெய்ன், தன்னை இலக்காக கொண்டே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் உணர்ந்ததாக தெரிவிக்கிறார். அவர்களை நோக்கி சுட்டுக்கொண்டே தான் ஓடியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த துப்பாக்கிச் சூடு சத்தங்களை எல்லாம் கேட்டுக்கொண்டு முகாமில் பதற்றத்தோடு யின் யின் மைன்ட் காத்திருந்துள்ளார். இது குறித்து அவர் கூறும்போது, "துப்பாக்கிச் சத்தம் தொடர்ந்து கேட்டது, அது மழை போல் ஒலித்தது" என்று கண்ணீருடன் தெரிவித்தார்.

இந்த திடீர் தாக்குதல் நிகழ்ந்த சில மணி நேரங்களில், ராணுவம் இறந்தவர்களின் புகைப்படங்களை பேஸ்புக்கில் வெளியிட்டது, 15 பேரைக் கொன்றதாக பெருமையாகக் கூறியிருந்தனர்.

அப்போதுதான் தனது இதயத்துக்கு மிகவும் நெருக்கமாக இருந்த மகனை இழந்துவிட்டதை யின் யின் மைன்ட் உணர்ந்தார்.

"என் மகன் என் மீது அதிக அக்கறை கொண்டிருந்தான். எனக்காக சமையலறையை சுத்தம் செய்வான், என் துணிகளை துவைப்பான். காயவைத்த என் சேலைகளை எடுத்து தருவான். என் மீது மிகவும் அன்பு வைத்திருந்தான் " என்று அவர் கூறுகிறார்.

ஜூன் மாதம், ராணுவத்தினர் அவர்களது கிராமத்தில் உள்ள 150 வீடுகளுடன் அவர்களின் வீடு மற்றும் உடைமைகள் அனைத்தையும் எரித்தனர். நாடு முழுவதும், குறிப்பாக மத்திய மியான்மரில் ராணுவ வீரர்களால் தீவைப்பு நடந்துள்ளது. கிளர்ச்சியில் போ கியார் யெய்னின் பங்கு குறித்து ராணுவத்தினர் நன்கு அறிந்திருப்பதாகவே தெரிகிறது. எனினும், ராணுவத்தில் அவரது மகன்கள் உள்ளனர் என்பது அவர்களுக்குத் தெரியுமா என்பது தெரியவில்லை என்கிறார்.

மியான்மரில் ராணுவம் ஆட்சியை கைப்பற்றியதில் இருந்து 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் புலம்பெயர்ந்துள்ளனர், குறைந்தது 30 ஆயிரம் வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. ஆட்சி கவிழ்ப்புக்கு பின்னர், 2,500க்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்டுள்ளனர் என சிறை கைதிகளுக்கான உதவி சங்கம் தெரிவித்துள்ளது. மோதல் கண்காணிப்பு குழுவான அக்லெட் இன் தரவுகளின்படி, இரு தரப்பிலும் உள்ள மொத்த உயிரிழப்பு புள்ளி விவரங்கள் 10 மடங்கு அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ராணுவம் போர்க்கள இழப்புகளை ஒப்புக்கொண்டது, ஆனால் அதுதொடர்பாக எந்த விவரங்களையும் வழங்கவில்லை.

### நீ உட்பட யாரையும் விட மாட்டேன்

ராணுவத்துக்கு எதிராக அதிகரித்துவரும் கிளர்ச்சி நிச்சயம் வெற்றி பெறும் என்றும் மீண்டும் குடும்ப வீட்டை கட்டுவோம் என்றும் நம்புவதாக போ கியார் யெய்ன் கூறுகிறார்.

ஆனால், உள்நாட்டு போர் தீவிரம் அடைந்துவருவதால் இதற்கு நீண்ட காலம் ஆகலாம். அவரது இரண்டு மகன்களும் ராணு வத்தை விட்டு வர மறுப்பதால் குடும்பம் பிளவுப்பட்டு உள்ளது. "நாங்கள் விருப்பப்பட்டு ராணுவத்துக்கு எதிராக போராடவில்லை.

உங்கள் தலைவர்கள் சரியாக இல்லை என்பதால் நாங்கள் போராடுகிறோம். உங்களால்தான் உன் சகோதரன் கொல்லப்பட்டான்" என்று ராணுவத்தில் உள்ள தனது மகனிடம் போ கியார் யெய்ன் தெரிவிக்கிறார்.

தனது சகோதரர் இறந்தது தனக்கு தெரியும் என்று நியி நியி கூறுகிறார். அப்போது, " உன் சொந்த கிராமத்தை வந்து பார். அனைத்தும் சாம்பலாகி விட்டது. உன் புகைப்படங்களை கூட எங்களால் காப்பாற்ற முடியவில்லை. என் இதயம் வலியால் துடிக்கிறது. " என்று அவரிடம் போ கியார் யெய்ன் ஆவேசத்துடன் தெரிவிக்கிறார்.

பின்னர், தனது மகனுக்கு எச்சரிக்கை விடுக்கும் விதமாக, "நீங்கள் என் பகுதிக்கு வந்து போரைத் தொடங்கினால், நீ உட்பட யாரையும் விடமாட்டேன். நான் மக்களுடன் மட்டுமே நிற்பேன் - என்னால் உங்களுடன் நிற்க முடியாது," என்று கூறி அழைப்பை துண்டித்தார். (பிபிசி)

# பொறுப்புக்கூறலும் நல்லிணக்கமும்:

## ஜனாதிபதி எதிர்நோக்கும் இரு சவால்கள்!



கலாநிதி ஜெகான் பெரேரா

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் இரவு பஸ்ஸின் முழு ஆசனங்களும் பதிவு செய்யப்பட்டிருந்தன. விடுமுறையில் வந்த புலம்பெயர் சமூகத்தைச் சேர்ந்த பலர் தங்களது கருத்துக்களை மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொண்டார்கள். கொழும்பில் இரு வாரங்களை செலவிட்டதாகவும் யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருப்பதாகவும் அங்கு இரு வாரங்களைச் செலவிடவிருப்பதாகவும் அவர்களில் ஒருவர் கூறினார். இலங்கையின் இயற்கை அழகு மற்றும் அதன் மக்களின் நட்பிணக்கத்தையும் பற்றி அவர் கனிவாகப் பேசினார். விடுமுறையில் வந்து இரு மாதங்களை செலவிட்டுக்கொண்டருப்பதாகவும் போதுமான விடுமுறை தனக்கு இருப்பதாகவும் அவர் கூறினார்.

கிறிஸ்மஸுக்கு முன்னரான நாட்களில் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி,காலி மற்றும் மட்டக்களப்பு போன்ற நகர மையங்கள் வழமைக்கு திரும்பியிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. கொழும்பில் வாகனப்போக்குவரத்து நெரிசல் மாத்திரமல்ல கடைகளிலும் பெருமளவில் மக்கள் சந்தடி காணப்பட்டது. இதே மாதிரியே யாழ்ப்பாணமும். அங்கு கடைகளில் பெருமளவில் மக்கள் கூடினார்கள் என்றாலும் கொழும்பைப் போன்று வீதிகளில் வாகன நெரிசல் இருக்கவில்லை. விடுமுறை காலம் என்பதால் யாழ்ப்பாணத்தில் உள்ள ஹோட்டல்களில் அறைகள் முழுமையாக பதிவு செய்யப்பட்டுவிட்டன. மிதமான விலைகளில் அறைகளைக் கொண்ட ஹோட்டல்களிலும் கூட இடமிருக்கவில்லை.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மாணவர்களால் நிரம்பியிருந்தது. இணைய வழியாக வகுப்புக்களை நடத்துகின்ற வேறு சில பல்கலைக் கழகங்களைப் போலன்றி யாழ்ப்பாண பல்கலைக்கழகம் நேரடி வகுப்புக்களை நடத்துவதற்கு தீர்மானித்திருந்தது. பகிடிவதைக்கு இடங்கொடுக்காதிருப்பதில் அந்த பல்கலைக்கழகம் உறுதியான தலைமைத்துவப் பண்பை வெளிக்காட்டியது. இரு விரிவுரையாளர்களினால் ஆரம்பிக்கப்பட்ட சமூக உணவு நிலையமும் இயங்குகிறது.

உணவு மற்றும் தங்குமிட வசதிகளுக்கான செலவுகள் கடுமையாக அதிகரித்த காரணத்தால் வேறு சில பல்கலைக் கழகங்களில் மாணவர்களின் வருகையில் வீழ்ச்சி காணப்படுகிறது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கடந்த காலத்தில் இன அடிப்படையில் மாணவர் குழுக்களிடையே மோதல்கள் இடம்பெற்றன. அரசியல் காரணங்களுக்காக நிருவாகத்துடனும் மாணவர்கள் மோதிக் கொண்டார்கள். அந்த நிலைமை இப்போது மாறிவிட்டது. மாணவர்களின் நலன்களில் அக்கறைகொண்ட நல்ல தலைமைத்துவமே இந்த மாற்றத்துக்கு காரணமாகும்.

ஆனால், இது மாத்திரமல்ல நாட்டில் காணப்படுகின்ற யதார்த்தநிலை. பெரிதாக வெளியில் தெரியாவிட்டாலும் பெரும்பான்மையான மக்களின் வாழ்வை பாதிக்கின்ற இன்னொரு யதார்த்தமும் இருக்கின்றது. பொருளாதார வீழ்ச்சி காரணமாக இந்த வருடம் பூராவும் சனத்தொகையில் பரந்தளவு பிரிவினரின் வாழ்க்கை அவலங்கள் நிறைந்ததாக இருந்தது. மக்களின் வருமானத்தில் எந்த அதிகரிப்பும் இல்லாத அதேவேளை விலைவாசி இரண்டு, மூன்று மடங்கு அதிகரித்த காரணத்தால் பெருமளவு மக்களால் வாழ்க்கையை சமாளிக்கமுடியாமல் போய்விட்டது.

அவர்கள் தங்களது சேமிப்புக்களை அன்றாட செலவுகளுக்காக பயன்படுத்த வேண்டியேற்பட்டது மாத்திரமல்ல கடன் படவும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். புதிய வருடத்தில் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு தயார் செய்வதில் அதாவது உயர்ந்த விலைகளில் பாடசாலை உபகரணங்களையும் அப்பியாசக் கொப்பிகளையும் வாங்குவதில் மக்கள் எதிர்நோக்கக்கூடிய நெருக்குதல்கள் மீண்டும் ஆர்ப்பாட்டங்களுக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மக்களின் பிரச்சினைகளில் அக்கறை காட்ட அரசாங்கம் இதுவரையில் தவறிவிட்டது.

### முதலாவது சவால்

நாட்டு மக்களில் பெரும்பான்மையானவர்கள் கடுமையான பொருளாதார இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும்போது பழைய ஊழல் நடவடிக்கைகளும் பொறுப்புக்கூறல் இன்மையும் தொடர்ந்துகொண்டிருப்பதே இன்றைய நிலைவரத்தின் அனர்த்தமாகும். அரசியல் தலையீட்டுடன் வெளிப்படைத்தன்மை இல்லாமல் மருந்துவகைகள் கொள்வனவு செய்யப்படுவதாக கூறப்படும் விவகாரத்தை சுற்றி சர்ச்சையொன்று மூண்டிருக்கிறது. அளவுக்கு அதிகமாக மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்ட முன்னைய நடவடிக்கைக்கு மத்தியில் இப்போது இந்த சர்ச்சை வந்திருக்கிறது.

நாடு பாரதூரமான வெளிநாட்டு நாணய பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டிருக்கின்றதற்கு மத்தியில், ஏற்கெனவே அளவுக்கு அதிகமாக கொள்வனவு செய்யப்பட்ட கொவிட் தடுப்பூசி கையிருப்பை அழிப்பதற்கான தொழில்நுட்ப வழிமுறைகளை நாடுவதில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. இன்னொரு கேள்விப்பத்திர சர்ச்சை ஊழல் நடவடிக்கைகள் தொடருவதை அம்பலப்படுத்துகிறது. கேள்விப்பத்திரங்களைக் கோருவதில் உள்ள பிரச்சினை காரணமாகவே நிலக்கரி கொள்வனவு செய்யப்படவில்லை என்று கூறும் இலங்கை மின்சார பொறியியலாளர்கள் விரைவாக இந்த பிரச்சினை தீர்க்கப்படாதுபோனால் பத்து மணி நேர மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டிவரும் என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். அவ்வாறு நேருமானால் மக்கள் மீணடும் வீதிக்கு இறங்கும் நிலை உருவாகலாம்.

இலங்கை உட்பட சமுதாயங்கள் மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கு கையாளக்கூடிய சில வழிகாட்டல்களை பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தனது கிறிஸ்மஸ் செய்தியில் கூறியிருக்கிறார். சிக்கல் இல்லாத முறையில் எழுதப்பட்டிருக்கும் பாப்பரசரின் செய்தியை விளங்கிக்கொள்வதில் எந்த பிரச்சினையும் இல்லை. கீழ் வருவன இலங்கைக்கு பிரயோகிக்கக்கூடிய பிரதான தொனிப்பொருள்களின் ஒரு சுருக்கமாகும்.

முதலாவது பொறுப்புக்கூறல் பற்றிய பிரச்சினையாகும். பொறுப்புக்கூறல் கோட்பாட்டை நடைமுறைப்படுத்தாதவர்களும் அதில் நம்பிக்கை இல்லாதவர்களும் சமூகத்தில் ஒரு பெரும்பான்மையினராக இருக்கும்போது பிரச்சினை ஏற்படுகிறது.

உலகளாவியதாக இந்த பிரச்சினை இருப்பதை ஏற்றுக்கொண்டவராக பாப்பரசர், ‘சந்தடியில்லாமல் எம்மத்தியில் பதுங்கியிருக்கும் தீமை உட்பட தீமைகளை கண்டனம் செய்வது போதுமானதல்ல.... கூடுதலாக கண்டனம் செய்வது பிரச்சினையை நாம் தீர்த்துவிட்டோம் என்ற ஒரு மாயத்தோற்றத்தை கொடுக்கக்கூடும்” என்று கூறியிருக்கிறார்.

அதே போன்றே இலங்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக்கூறல் பிரச்சினைகளில் முன்னோக்கிச் செல்வதற்கு தீர்மானிக்கவேண்டிய தேவை இருக்கும். இது முதலாவது சவாலாகும்.

ஊழலாக இருந்தாலென்ன, பொறுப்புக்கூறல் அல்லது அரசியலமைப்பை பின்பற்றுவதாக இருந்தாலென்ன இந்த விடயத்தில் ஜனாதிபதி இன்னமும் உறுதிப்பாட்டை வெளிக்காட்டவில்லை. அரசாங்க உறுப்பினர்களை எதிர்நோக்கி நிற்கும் குடியுரிமைப் பிரச்சினை இன்னமும் தீர்வு காணப்படாததாகவே இருக்கிறது. அரசியலமைப்புக்கான 21வது திருத்தம் நிறைவேற்றப்பட்டமை நல்லாட்சிக்கும் நல்லெண்ணத்திற்கும் கிடைத்த வெற்றி என்று பெருமையுடன் கூறப்படுகிறது.

ஒரு நடுநிலையான முறையில் அரசியலமைப்பை பின்பற்றுகின்ற விடயத்தில் இதுவரையில் அரசாங்கத்திடமிருந்து வந்திருக்கக்கூடிய சமிக்ஞைகள் மிகவும் எதிர்மறையானவையாகவே இருக்கின்றன.

> “தனது கிறிஸ்மஸ் செய்தியில் பாப்பரசர் வலியுறுத்தியதைப் போன்று தீமையை வெறுமனே தவிர்ப்பதல்ல, எம்மால் முடிந்த நல்லவை சகலவற்றையும் செய்யவேண்டியதே இன்றை கட்டத்தில் சிவில் சமூகத்துக்கும் குடிமக்களுக்கும் இருக்கும் பணியாகும்.



### இரண்டாவது சவால்

பாராளுமன்றத்தின் சில நடவடிக்கைகள் சட்டத்தின் ஆட்சி அவமதிக்கப்படுவதை மூடிமறைக்கின்றன. ஆளும் வர்க்கம் தன்னை சட்டத்துக்கு மேலானதாக நம்புகிறது. ‘ஆயுதங்களின் வன்முறைக்கு அப்பால், வாய்மொழி வழியான துஷ்பிரயோகமும் அதிகார துஷ்பிரயோகத்தின் வன்முறையும் வம்புப் பேச்சில் மறைந்திருக்கும் வன்முறையும் உள்ளன” என்று பாப்பரசர் எச்சரிக்கிறார். இதை மறுவார்த்தைகளில் கூறுவதானால், இராணுவப் போர்க்களத்தில் போருக்கு 2009 ஆம் ஆண்டு வந்த முடிவு சமாதானத்தை உறுதிப்படுத்திவிட்டதாக அர்த்தப்படவில்லை. ஏனென்றால் வன்முறை பல்வேறு வடிவங்களை எடுக்கமுடியும்.

ஜனாதிபதி விக்கிரமசிங்க வெற்றிகொள்வதற்கு இரண்டாவது முக்கியமான ஒரு சவாலும் இருக்கிறது. இலங்கையின் இனநெருக்கடியை அரசியல் தீர்வொன்றின் ஊடாக முடிவுக்கு கொண்டவருவதே அந்த சவாலாகும். சுமார் 75 வருட காலமாக முன்னைய தலைவர்கள் தோல்வி கண்டபோதிலும் அடுத்தவருடம் பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த பணியை தான் சாதிக்கப் போவதாக ஜனாதிபதி விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்.

இணக்கப்பாட்டைக் காணும் இந்த செயன்முறையில் வெற்றியை சாதித்துக்காட்டுவதற்கான ஜனாதிபதியின் முயற்சிகள் தொடர்பில் கணிசமான நம்பிக்கையீனமும் எதிர்ப்பும் வெளிக்காட்டப்படுகிறது. பொறுப்புக்கூறல் பிரச்சினைகளை கையாளுவதில் இதுவரையில் அவர் கண்ட தோல்வி அரசியல் தீர்வுக்கு இணக்கப்பாட்டை காணும் முயற்சியிலும் தோல்வியே கிட்டும் என்பதற்கான காரணமாக கூறப்படுகிறது.

ஊழலும் தீயொழுக்கமும் இலங்கைக்கு மாத்திரம் பிரத்தியேகமானவையல்ல. அவற்றை உலகெங்கும் காணமுடியும். இந்த பிரச்சினைகள் மேலோட்டமான முறையில் கையளப்படவோ அல்லது எப்போதாவது ஒரு தடவை நிகழ்கிற பிறழ்ச்சிகளாக நோக்கப்படவோ கூடாது.

சட்டத்தின் ஆட்சிக்கு உறுதிபூண்ட ஜனநாயக சமுதாயம் ஒன்று இந்த நிலைவரங்களை எவ்வாறு கையாளுகிறது என்பதே கேள்வியாகும். பொருளாதாரப் பிரச்சினையும் அரசியலும் இல்லை என்றால் சுவிட்சர்லாந்தை விடவும் சிறப்பாக வாழ்வதற்கு உகந்த நாடு இலங்கை என்று 15 வருடங்களுக்கு முன்னர் நாட்டைவிட்டு வெளியேறிய புலம்பெயர் சமூகத்தைச் சேர்ந்தவர் கூறினார்.

சிங்கள கிராமத்தைப் பற்றி தரமான நாவல் ஒன்றை எழுதிய பிரிட்டிஷ் காலனித்துவ அதிகாரியான லெனார்ட் வூல்வ் இலங்கை கிழக்கின் சுவிட்சர்லாந்தாக வரமுடியும் என்று எதிர்வு கூறினார். 1938 ஆம் ஆண்டு காலனித்துவ அரசாங்கத்துக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் அவர் இலங்கைக்கு சமஷ்டி முறை உகந்தது என்ற தனது சிபாரிசை நியாயப்படுத்துவதற்காக அன்றைய இலங்கையில் வாழ்ந்த சகல சமூகங்களினதும் சனத்தொகை விபரங்களை சுவிட்சர்லாந்தின் ஒவ்வொரு கன்டோனின் அளவுடன் ஒப்பிட்டு விளங்கப்படுத்தியிருந்தார்.

உள்ளூர் மட்டத்தில் மாற்றத்தின் முகவர்களாக மக்கள் மாறுவதே அதிகாரம் பரவலாக்கப்பட்ட முறையொன்றின் அல்லது சமஷ்டி முறையொன்றின் சாராம்சமாகும்.

சமூக உணவு நிலையம் ஒன்றை (Community Kitchen) நடத்துவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் மூலமாக முன்னோக்கிச் செல்வதற்கான பாதையை அரசியல் சாராத நிருவாக மட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக் கழகம் காட்டியிருக்கிறது. அந்த உணவுநிலையத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்களினால் சத்தான உணவைப் பெறக்கூடியதாக இருக்கிறது.

தனது கிறிஸ்மஸ் செய்தியில் பாப்பரசர் வலியுறுத்தியதைப் போன்று தீமையை வெறுமனே தவிர்ப்பதல்ல, எம்மால் முடிந்த நல்லவை சகலவற்றையும் செய்யவேண்டியதே இன்றை கட்டத்தில் சிவில் சமூகத்துக்கும் குடிமக்களுக்கும் இருக்கும் பணியாகும். யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இத்தகைய பணியையே செய்கிறது. தேசிய மீட்சிக்கான சிறந்த திட்டம் ஒன்றை இனிமேல்தான் நாம் காணவேண்டியிருப்பதால் இதுவே முன்னோக்கிச் செல்வதற்கான ஒரே பாதையாகும்.

# கிளிநொச்சி புதிய பஸ் நிலையம் விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு!



கிளிநொச்சி, டிசெ. 28

கட்டி முடிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி புதிய பேருந்து நிலையம் விரைவில் மக்களிடம் கையளிக்கப்படும். நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இது தொடர்பான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்த பேருந்து நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை 94 மில்லியன் ரூபாய் ஆகும். 2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரை இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனம் இதன் ஒருபகுதியில் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டது. பின்னர், நகர அபிவிருத்தி அதிகார சபை இங்கு 2020இல் கட்டுமானப் பணி களை ஆரம்பித்து 2022 மே மாதம் நிறைவு செய்தது. வடக்கு மாகாண சபைக்கு சொந்தமான காணியில் இது நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி புதிய பேருந்து நிலையத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், இதுவரை மக்களிடம் கையளிக்கப்படவில்லை என அண்மையில் நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்பில் தெரிய வந்துள்ளது.

அங்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த புதிய பஸ் நிலையத்தை மக்களிடம் கையளிக்க உடனடியாக ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். இந்த புதிய பஸ் நிலையம் பல மாதங்களாக திறக்கப்படாமல் உள்ளதால் தற்போது பொதுமக்கள் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

சமீபகால பொருளாதார நெருக்கடியால், அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப் பட்டு வந்த கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப் பட்டன. இதன்படி, நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களை தற்காலிகமாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த திட்டங்களை வரும் ஜனவரி மாதம் முதல் மீண்டும் தொடங்க அமைச்சர் ஏற்கனவே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

## உள்ளூராட்சி தேர்தலுக்கான அச்சிடும் செலவு வாக்குச்சீட்டின் அளவை பொறுத்தே முடிவாகும்

கொழும்பு, டிசெ. 28

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அச்சிடும் செலவுகள் வாக்குச் சீட்டின் அளவைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும் என அச்சகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தல் மற்றும் சர்வஜன வாக்கெடுப்பின்போது மாத்திரம் ஒரே அளவிலேயே வாக்குச் சீட்டு அச்சிடப்படும் எனவும், ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் வாக்குச் சீட்டின் அளவு குறைக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், வாக்குச் சீட்டுகளை அச்சிட எடுக்கும் நேரத்தைக் கருத்தில் கொண்டு, அதற்கான செலவுகள் திருத்தப் படும் எனவும் அச்சகத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

தேர்தல் தினத்துடன் ஒப்பிடும் போது வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்கான கால அவகாசம் மிகக் குறைவாக இருந்தால் செலவுகள் அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான முதற்கட்டப் பணிகள் அரசாங்க அச்சகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

## கரையோரங்களில் செயல்படாத சுனாமி எச்சரிக்கை கோபுரங்கள்

கொழும்பு, டிசெ. 28

தெற்கில் கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ள சில சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்கள் இயங்கவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

காலி, பெரலிய மற்றும் ஹிக்கடுவைக்கு அருகில் உள்ள சில கோபுரங்கள் தற்போது இயங்கவில்லை என மக்கள் தெரிவித்தனர்.

இப்பிரச்னை குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்து, கோபுரங்களை மீண்டும் செயல் பட வைக்கவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

### கல்வி tv CHANNEL-1

**27.12.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2

**27.12.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# திருவெம்பாவை விரதம் இன்று ஆரம்பமாகின்றது

அம்பாறை, டிசெ. 28

இந்துக்களின் திருப் பள்ளி எழுச்சி, திருவெம் பாவை விரதம் மற்றும் ஊர் வலம் இன்று புதன்கிழமை அதிகாலை ஆரம்பமாகின் றது.

சிவனை நினைந்து வழி படும் இவ்விரதம் இன்று புதன்கிழமை அதிகாலை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 தினங் கள் திருவெம்பாவை விர தம் மற்றும் ஊர்வல நிகழ்வு கள் இடம்பெறவுள்ளன.

இறுதியில் பத்தாம் நாள் (06.01.2023) வெள்ளிக் கிழமை திருவாதிரை தீர்த் தோற்சவத்துடன் திருவெம் பாவை நோன்பு நிறைவடை கிறது.

இக்காலகட்டத்தில் பிரம்ம முகூர்த்த வேளை யாம் அதிகாலை 4-6 மணி வேளையில் ஆலய வழி பாட்டில் ஈடுபடுவதுடன், இவ் ஊர்வலத்திலும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல நடராஜப் பெருமானின் அருளைப் பெறுவது இந்துக்களின் வழமையான செயற்பாடாகும்.

காரைதீவுஇந்து சமய விருத்திச்சங்கம் வருடா வரு டம் நடாத்திவரும் திருப் பள்ளி எழுச்சி ஊர்வலமா னது இன்று அதிகாலை 4.00 மணியளவில் ஸ்ரீ கண் ணகை அம்மன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும்.

06ஆம் திகதி திருவா திரை அதாவது ஆருத்ரா தரிசனத்துடன் இவ்விரதம் நிறைவடையும். (அ)

# அம்பாறையில் இராணுவத்தின் பாதுகாப்பு நடவடிக்கை தீவிரம்!



அம்பாறை, டிசெ. 28

இலங்கை அரசாங்கம் நாடு முழுவதும் பாதுகாப்பினை பலப்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலை யில் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் முழு மையாக பாதுகாப்பு நடவடிக் கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இம்மாவட்டத்தின் கரை யோரப் பிரதேசங்களான கல் முனை, காரைதீவு, சாய்ந்தமருது, நிந்தவூர், சம்மாந்துறை, அக்க ரைப்பற்று போன்ற பிரதேச முக்கிய சந்திகளில் இராணுவத் தினர் பாதுகாப்பு நடவடிக்கை கள் மேற்கொண்டுள்ளனர்.

சம்மாந்துறை, கல்முனை நகர் பகுதியில் பெரும்பாலான வர்த்தக நிலையங்களுக்கு முன் பாகவும் மின் தடை ஏற்படு கின்ற சந்தர்ப்பங்களில் மக்க ளின் பாதுகாப்பைக் கவனத்திற் கொண்டும் இராணுவத்தினர் செயற்பட்டு வருகின்றனர்.

மேலும் இப்பகுதிகளில் போதைப்பொருள் கடத்தல் செயற்பாடுகளை தடுக்கும் வகையில் சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் யாவும் இராணு வத்தினரால் சோதனையிடப் படுகின்றன.

இது தவிர இங்குள்ள பள்ளி வாசல்கள், தேவாலயங்கள், கோயில்கள் உட்பட பல்வேறு பொது இடங்களிலும் சுழற்சி முறையில் இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடு பட்டுள்ளனர். (அ)

# பல்கலைக்கழகத்துக்கு செல்லும் சாதனையாளர்கள் கௌரவிப்பு




அம்பாறை, டிசெ. 28

கிழக்கின் பழம்பெரும் கழக மாம் காரைதீவு விளையாட் டுக்கழகத்தின் உறுப்பினர்களா யிருந்து, இவ்வாண்டு பல்க லைக்கழகம் செல்லும் மாணவர் கள், வருடாந்த பொதுக் கூட் டத்தில் பாராட்டிக் கௌரவிக் கப்பட்டனர்.

காரைதீவு விளையாட்டு கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் இரவு கழக தலைமையகத்தில் நடைபெற்றபோதே இக்கௌர விப்பு இடம்பெற்றது.

மே.கஜன், எம்.ராகுலன், ஜெ.கோசரன், சி.தனோசன் ஆகிய கழக வீரர்கள் பல்கலைக் கழத்திற்கு தெரிவானதை யொட்டி பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அதிதிகளாக கழகப் போஷ கர்களான காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், நில அளவையாளர் வே . இராஜேந்திரன் , உதவிக் கல் விப்பணிப்பாளர் வி.ரி. சகா தேவராஜா மற்றும் டாக்டர். ம.ரமணன் ஆகியோர் கலந்து கொண்டு மேற்படி நால்வ ரையும் பாராட்டி பரிசுகள் வழங்கினர். (அ)

# மாற்றுத்திறனாளிகள் தினம் மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு



மட்டக்களப்பு, டிசெ. 28

சர்வதேச மாற்றுத்திற னாளிகள் தினத்தை முன்னிட்டு மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகமும், பிரதேச மாற்றுத்திறனாளிகள் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்த சர்வ தேச மாற்றுத்திறனாளிகள் தினம் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் களுவாஞ்சிகுடி இராசமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

"சமத்துவமான உலகத்தை வளர்ப்பதில் புத்தாக்கத்தின் வகிபங்கு உள்ளடங்கிய வளர்ச் சிக்கான உருமாறும் தீர்வுகள்" எனும் தொனிப்பொருளில் அமைந்த இந் நிகழ்வில் சிமிர்னா விசேட தேவையுடைய பிள்ளை கள், "புகலிடம்" விசேட தேவை யுடைய பிள்ளைகள் மற்றும் மட்டக்களப்பு பட்டிருப்பு மகி ழூர்முனை சக்தி வித்தியாலய விசேட தேவையுடைய மாண வர்களினால் ஆற்றுகை செய் யப்பட்ட நிகழ்வுகள் கலந்து கொண்டோர் அனைவரினதும் பாராட்டுதல்களை பெற்றது.

இதன் போது முன்மாதிரி யான சர்வதேச பெண் தலை மைத்துவ விருதினை பெற்ற மைக்காக மண்முனை தென் எருவில்பற்று பிரதேச மாற்று திறனாளிகள் சங்கத்தினரால் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில் வரத்னம் அவர்கள் பாராட்டி கௌ ரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் சமூக சேவைகள் உத் தியோகத்தர் இ. கிரு பாகரன், களுதா வளை பிரதேச சபை செயலாளர், அபிவி ருத்தி உத்தியோகத் தர் (சமூக சேவை) திரு மதி. க .மனோகரன், மாவட்ட அபிவி ருத்தி உத்தியோகத்தர் (சமூக சேவை) திருமதி அ.சந்திர குமார், மாவட்ட மாற்று திறனாளிகள் சங்கத் தலைவர், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச மாற்று திறனா ளிகள் சங்கத்தினர், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (அ)

# புளுகுநாவைக்குளம் புனரமைப்பு

மட்டக்களப்பு, டிசெ. 28

கொக்கட்டிச்சோலை தாந்தாமலைப் பகுதியிலுள்ள புளுகுநாவைக்குளம், கங்காணியார்குளம் ஆகிய நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இக் குளங்களிலிருந்து நீர்ப்பாய்ச்சுதல் இலகுவாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் அமைவதற்கான புனரமைப்பு வேலைகள் தற்போது சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

கடந்த வருடம் புளுகுநாவைக்குளத் தின் நீர்க்கொள்ளளவை அதிகரிப்பதற் கான புனரமைப்புப் பணிகள் முடிவடைந் திருந்தன.

இவ்விரு குளங்களினதும் புனரமைப்பி னால் சுமார் 7 ஆயிரம் ஏக்கர் வயல் காணி கள் பயன்பெறுகின்றன. இதனால் மட்டக் களப்பு மாவட்ட நெல் உற்பத்தியும் அதிக ரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# வைத்தியரின் மனிதபிமானத்தை பாராட்டிய கல்முனை பொலிஸார்

அம்பாறை, டிசெ. 28

வீதியில் கண்டெடுக்கப்பட்ட பணப்பை உரியவரிடம் ஒப்படைக் கப்பட்டதுடன் பணப்பையை கண் டெடுத்து ஒப்படைத்த கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்திய கலாநிதி ஐ. எல். எம். றிபாஸை கல்முனை தலைமையக பொலிஸார் பாராட்டியுள்ளனர்.

இச்சம்பவம் கல்முனை தலைமை யக பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்றதுடன் காணாமல்போன பணப்பை மீட்கப்பட்டு பொலி ஸார் முன்னிலையில் உரிய நபரிட ஒப்படைக்கப்பட்டது.

கொழும்பு பகுதிக்கு கடந்த 21 ஆம் திகதி அன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ. எல். எம். றிபாஸ் கடமைக்காக சென்ற நிலையில் கடவத்தை பகுதியில் நள்ளிரவு பணப்பை ஒன்றைக் கண்டெடுத்துள்ளார். பின்னர் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பணப்பையை உரிய நபரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

குறித்த இப்பணப்பையில் சுமார் 44030 ரூபா பெறுமதியுடைய பணம் உட்பட சாரதி அனுமதிப் பத்திரம் உள் ளிட்ட முக்கிய ஆவணங்கள் உள் ளடங்கி இருந்தன. தனது பணப்பை காணாமல் சென்ற நிலையில் உரிய நபரும் மிக மன உளைச்சலுக்கு உள்ளாகி இருந்துள்ளார்.

இந்நிலையில் தான் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் இருந்து தொலைபேசி வாயிலாக பணப்பையை தவறவிடப்பட்ட நபருக்கு அழைப்பு விடுக்கப்பட்டு மீட்கப்பட்ட பணப்பை ஒப்படைக் கப்பட்டது.

தவறவிடப்பட்ட பணப்பையை பொலிஸார் முன்னிலையில் உரிமை யாளிடம் ஒப்படைக்க முயற்சி செய்த கல்முனை பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ. எல். எம். றிபாஸை கல்முனை பொலிஸார் பாராட்டி கௌரவித் தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# ரஷ்யா- உக்ரைன் அமைதிக்கு மத்தியஸ்தம் செய்யவேண்டும்

## மோடியிடம் ஜெலென்ஸ்கி கோரிக்கை



கீவ், டிசெ. 28

உக்ரைன்-ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டுவருவ தற்கான சமாதான பேச்சுக்கு இந்திய பிரதமர் மோடியின் உதவியை உக்ரைன் ஜனாதி பதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி கோரியுள்ளார்.

திங்களன்று ஜெலென்ஸ் கிக்கும் மோடிக்கும் இடையே நடந்த தொலை பேசி அழைப்பின்போது இந் தக் கோரிக்கை விடுக்கப்பட்ட தாக உக்ரைன் ஜனாதிபதி ருவிட்டரில் தெரிவித்துள்ளார்.

உக்ரைனுடன் இணைந்திருக்கும் மேற்கத்திய நாடுக ளின் அழுத்தம் இருந்தபோதிலும், இந்தியா நடுநிலையான நிலைப்பாட்டை கடைப்பிடித்து வருகின்றது.

சீனாவுக்கு அடுத்த படியாக ரஷ்யாவின் எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

மத்தியஸ்தம் செய்வதற்கான கோரிக்கை குறித்து இந்திய அரசாங்கம் உடனடியாக கருத்து தெரிவிக்க வில்லை, ஆனால் இரு தலைவர்களும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து விவாதித் ததாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# உக்ரைனின் தலைவிதியை இனி ரஷ்ய இராணுவம் தீர்மானிக்கும்!

## இறுதி எச்சரிக்கை விடுத்த வெளியுறவு அமைச்சர்

மொஸ்கோ, டிசெ. 28

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் உக்ரைனுக்கு ஒரு இறுதி எச்சரிக்கையை விடுத்துள்ளார். ரஷ்யாவின் கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள் - அல்லது ரஷ்ய இராணுவம் உக்ரைனின் தலைவிதியை தீர்மானிக்கும் என்பதே அந்த எச்சரிக்கை.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மீண்டும் சமாதானப் பேச்சுக்களுக்குத் தயாராக இருப்பதாகக் கூறிய ஒரு நாளுக்குப் பிறகு பேசிய லாவ்ரோவ், உக்ரைன் அதன் சொந்த நன்மைக்காக, ரஷ்யவின் விருப்பத்திற்கு இணங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், "நம் நாட்டிற்கு ஒரு மூலோபாய தோல்வியை அதன் நோக்கங்களில் ஒன்றாக அறிவிக்கும் பிடனின் நிர்வாகத்துடன் ஒரு சாதாரண உரையாடலைப் பேணுவது புறநிலை ரீதியாக சாத்தியமற்றது" என்றும் லாவ்ரோவ் கூறினார்.

அரச செய்தி நிறுவனமான 'ராஸ்' இதனை தெரிவித்துள்ளது.

"உக்ரைன் கட்டுப்படுத்தப்படும் பிர தேசங்களை இராணுவமயமாக்கலில் இருந்து விடுவிப்பது மற்றும் ரஷ்யாவின் பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல்களை அகற்றுதல், எங்கள் புதிய நிலங்களை அங்கீகரிப்பது உட்பட, ரஷ்யாவின் நிலைப்பாடு எதிரிகளுக்கு நன்கு தெரியும்" என்று லாவ்ரோவ் தெரிவித்தார்.

"விடயம் எளிதானது: உங்கள் சொந்த நலனுக்காக அவற்றை நிறைவேற்றுங்கள். இல்லையெனில், ரஷ்ய ராணுவம்தான் பிரச்சினையை முடிவு செய்யும்" என்று லாவ்ரோவ் கூறினார்.

மோதல் எவ்வளவு காலம் நீடிக்கும் என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, லாவ்ரோவ் கூறினார்: "பந்து உக்ரைன் ஆட்சியாளர் உள்ளது, அதன் பின்னால் வாஷிங்டன் உள்ளது." என்றார்.

அமெரிக்காவும் அதன் நேட்டோ நட்பு நாடுகளும் நமது நாட்டை அழிக்கும் போர்க்களத்தில் ரஷ்யாவை வெற்றி கொள்ள முயல்கின்றன என்றும் தெரிவித்தார்.

"மேற்கு கூட்டு மற்றும் அவர்களின் கைப்பாவையான ஐஉக்ரைனிய ஜனாதிபதி விளாடிமிர்ஸ ஜெலென்ஸ்கியின் நடவடிக்கைகள் உக்ரைனிய நெருக்கடியின் உலகளாவிய தன்மையை உறுதிப்படுத்துகின்றன. அமெரிக்கா மற்றும் அதன் நேட்டோ நட்பு நாடுகளின் மூலோபாய இலக்கு போர்க்களத்தில் ரஷ்யாவை வெற்றி பெறுவது என்பது இரகசியமல்ல. நமது நாட்டை பலவீனப்படுத்தும் அல்லது அழிக்கும் ஒரு பொறிமுறையாக இந்த யுத்தத்தை செய்கிறார்கள். எங்கள் எதிரிகள் இந்த இலக்கை அடைய எதையும் செய்வார்கள்," என்று அவர் கூறினார்.

இந்த மோதலின் பயனாளியான அமெரிக்கா, பொருளாதார ரீதியாகவும், மூலோபாய ரீதியாகவும் அதிலிருந்து அதிகப் பலனைப் பெற முயன்று வருவதாக தெரிவித்தார்.

"ரஷ்யாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலான பாரம்பரிய பிணைப்புகளை உடைத்து, ஐரோப்பிய நாடுகளை இன்னும் அதிகமாகச் சார்ந்திருக்கும் ஒரு முக்கிய புவிசார் அரசியல் இலக்கை வாஷிங்டன் உருவாக்க முயற்சித்து வருகிறது" என்று லாவ்ரோவ் வலியுறுத்தினார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடனின் மோதல் போக்கின் காரணமாக ரஷ்யாவும் அமெரிக்காவும் உரையாடலின் இயல்பான பாதையை பராமரிக்க முடியவில்லை என்று கூறினார்.

"நம் நாட்டுக்கு ஒரு மூலோபாய தோல்வியை அதன் நோக்கங்களில் ஒன்றாக அறிவிக்கும் பிடனின் நிர்வாகத்துடன் ஒரு சாதாரண உரையாடலைப் பேணுவது புறநிலை ரீதியாக சாத்தியமற்றது" என்று கூறினார்.

"ரஷ்ய-அமெரிக்க உறவுகள் வொஷிங்டனின் ரஷ்ய விரோத போக்கு காரணமாக கிட்டத்தட்ட ஸ்தம்பிதமடைந்துள்ளதால் மிகவும் மோசமான நிலையில் உள்ளன" என்று குறிப்பிட்டார்.

"அரசுகளுக்கிடையேயான உறவுகளை வேண்டுமென்றே மதிப்பிழக்கச் செய்வது எங்கள் பாணியில் இல்லை என்பதை நாங்கள் தொடர்ந்து அமெரிக்கர்களுக்கு விளக்கி வருகிறோம்" என்று லாவ்ரோவ் குறிப்பிட்டார். (அ)

கனடாவில் பனிப்புயல்

# கியூபெக் மாகாணத்தில் மட்டும் ஆயிரக்கணக்கானோர் இருளில்!




கியூபெக், டிசெ. 28

கியூபெக் மாகாணத்தின் தெற்குப் பகுதியில் கடுமையான பனிப்புயல் வீசியதால், ஆயிரக் கணக்கானோர் மின்சாரம் இல்லாமல் தவித்து வருகின்றனர்.

55,000 க்கும் மேற்பட்ட வாடிக் கையாளர்களுக்கு இன்னும் மின்சாரம் இல்லை என்று ஹைட்ரோ கியூபெக் தெரிவித்துள்ளது.

கிறிஸ்மஸின் வானிலை நிலைமை கள் மற்றொரு கடினமான நாளை உரு வாக் கியது என்று பொது பயன்பாட் டின் தலைமை நிர்வாக அதிகாரி செய்தியாளர்களிடம் கூறினார்.

இன்று புதன்கிழமைக்குள் பெரும் பான்மையான வீடுகளுக்கு மின்சாரத்தை மீட்டெடுப்பதே குறிக்கோள் என்று சோபி ப்ரோச்சு கூறினார். ஆனால் புத்தாண்டில் யாரும் இருட்டில் இருக்க மாட்டார்கள் என்று தன்னால் உறுதியளிக்க முடியவில்லை என்றார்.

"கடைசி வாடிக்கையாளர்களைப் பெற நாங்கள் மிகவும் கடினமாக உழைக்கிறோம்," என்று அவர் கூறினார்.

மின்சாரத்தை மீட்டெடுக்க குழுக்கள் வேலை செய்கின்றன. ஆனால் மீதமுள்ள பெரும்பாலான செயலிழப்புகள் ஒரே நேரத்தில் குறைந்த எண்ணிக்கையிலான மக்களை பாதிக்கின்றன - அதனால்தான் அதை சரிசெய்ய நீண்ட நேரம் எடுக்கும் என்று ஹைட்ரோ கியூபெக் தெரிவித் துள்ளது. மின்விளக்குகளை மீண்டும் எரிய வைக்க தனியார் நிறுவனங்களும் கைகொடுக்கின்றன.

"இந்த நேரத்தில் மறுசீரமைப்பு தாமதங்களுக்கான நேரத்தை வழங்குவது மிகவும் கடினம்" என்று ப்ரோச்சு கூறினார். "இது ஒரு அறுவைச் சிகிச்சை போன்றது, இன்னும் குறைந்தது 2,000 செயலிழப்புகள் உள்ளன."

ப்ரோச்சு கியூபெக் மக்களை பாதுகாப்பாக இருக்குமாறும் அவர்களுக்கு உதவி தேவைப்பட்டால் நகராட்சி அதிகாரிகளை அணுகுமாறும் கூறினார். செயலிழப்புகளை நீங்களே சரிசெய்ய முயற்சிக்காதீர்கள் என அவர் மேலும் கூறினார். (அ)

# அரசை விமர்சித்த வீராங்கனைக்கு பெலாரஸில் 12 வருடங்கள் சிறை!

மின்ஸ்க், டிசெ. 28

பெலாரஸின் தேசிய பாதுகாப்புக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் தடைகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுத்ததற்காக முன்னாள் ஒலிம்பிக் நீச்சல் வீராங்கனை அலியாக்சாண்ட்ரா ஹெராசிமேனியா மற்றும் அரசியல் ஆர்வலர் அலெக்சாண்டர் ஒபிகின் ஆகியோருக்கு மின்ஸ்க் நீதிமன்றம் 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது.

அலியாக்சாண்ட்ரா ஹெராசிமேனியா (வயது-36) 2012 லண்டன் ஒலிம்பிக்கில் வெள்ளியும், 2012 உலக தடகள சம்பியன்ஷிப்பில் தங்கமும் வென்றார்.

"பெலாரஸ், தனிநபர்கள் மற்றும் குடியரசின் சட்டப்பூர்வ நிறுவனங்களுக்கு எதிரான கட்டுப்பாடுகள் (தடைகள்) உட்பட, பெலாரஸின் தேசிய பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிக்கும் நோக்கில் செயல்களைச் செய்வதற்கான பொது அழைப்புகளில் அவர்கள் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டனர்" என்று அரச செய்தி நிறுவனமான பெல்ட்டா தெரிவித்துள்ளது.

அரசியல் எதிரிகள், சிவில் சமூகம் மற்றும் பத்திரிகையாளர்கள் மீதான தொடர்ச்சியான அடக்குமுறைக்காக பெலாரஸ் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பல நாடுகளால் புறக்கணிக்கப் பட்டுள்ளது. பெலாரஸில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் கூற்றுப்படி, பெலாரஸில் 1,300 க்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் உள்ளனர்.

எனினும், ரஷ்ய ஆதரவு நிலைப்பாட்டினால் குறிவைக்கப்படுவதாக குறிப்பிட்டு, குற்றச்சாட்டுக்களை பெலாரஸ் நிராகரித்து வருகிறது.

ஒகஸ்ட் 2020 இல் அலெக்சாண்டர் லுகாஷென்கோவின் தேர்தல் வெற்றி மோசடியானது என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தின. இதையடுத்து முன் னெடுக்கப்பட்ட போராட்டங்கள் அடக்கப்பட்டன. இந்த அடக்குமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்து, பெலாரஸை விட்டு வெளியேறிய விளையாட்டு வீரர்களில் ஹெராசிமேனியாவும் ஒருவர். இப்போது லிதுவேனியாவில் வசிக்கிறார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் நெருங்கிய கூட்டாளியான லுகாஷென்கோ, எந்த தவறும் செய்யவில்லை என மறுத்துள்ளார். உக்ரைன் மீதான ரஷ்யாவின் சிறப்பு நடவடிக்கையில் பெலாரஸ் உத்தியோகபூர்வமாக பங்கேற்க வில்லை என்றாலும், ரஷ்யா தனது பல முனை தாக்குதல்களை நடத்த பெலாரஷ்ய பிரதேசத்தை பயன்படுத்தியது.

லுகாஷென்கோவின் சர்வாதிகார ஆட்சியின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு அடக்குமுறைகளை எதிர்கொண்ட விளையாட்டு வீரர்களை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்ட பெலாரஷ்ய விளையாட்டு ஒற்றுமை அறக்கட்டளையின் தலைவர் அலெக்சாண்டர் ஒபிகின் ஆவார். ஹெராசிமேனியாவுடன் இணைந்து அதனை நிறுவினார். அந்த அமைப்பு பெலாரஸிற்கு எதிராக தொடர்ந்து பிரசாரம் செய்து வந்தது.

"ஒகஸ்ட், 2020 முதல் மே 20, 2022 வரை, ஊடகங்கள் மற்றும் இணையம் மூலம், பெலாரஸ் பிரதேசத்தில் நடந்த நிகழ்வுகள், 2020 தேர்தல் பிரசாரத்தின் போக்கு மற்றும் முடிவுகள் குறித்து வேண்டுமென்றே தவறான தகவல்களையும் புனைகதைகளையும் பரப்பினர்," என அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

ஹெராசிமேனியாவின் தொடர்மாடி, அவரது கார் மற்றும் அவரது வங்கிக் கணக்கில் உள்ள 48,700 டொலர் ஆகிய வற்றை பறிமுதல் செய்யவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

(அ)

# 100ஆவது டெஸ்ட் போட்டி; வோர்ணர் இரட்டை சதம்!



மெல்பர்ன், டிசெ. 28

தனது 100ஆவது டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய அவுஸ்திரேலியாவின் டேவிட் வோர்ணர் இரட்டைச் சதம் அடித்து அசத்தினார். இதன் மூலம் இங்கிலாந்து அணியின் ஜோ ரூட் சாதனையை சமன் செய்தார்.

மெல்பர்னில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக அவுஸ்திரேலியா பொக்ஸிங் டே டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகிறது. போட்டியின் இரண்டாம் நாளான நேற்று அவுஸ்திரேலியா துடுப்பெடுத்தாடியது.

நேற்றைய தினம் சதம் அடித்த டேவிட் வோர்ணர் 100ஆவது போட்டியில் சதம் அடித்த 10ஆவது வீரர் என்ற பெருமையை எட்டினார். கடந்த 3 ஆண்டு காலமாக சதம் அடிக்கத் திணறிய வோர்ணர் தொடர்ச்சியாக அதிரடியாக ஆடி இரட்டை சதம் அடித்தார்.

சென்னையில் இந்தியாவுக்கு எதிராக இங்கிலாந்தின் ஜோ ரூட் 218 ஓட்டங்களை தன் 100ஆவது டெஸ்ட் போட்டியில் எடுத்த சாதனையை வோர்ணர் தனது இரட்டை சதம் மூலம் சமன் செய்தார். இதேசமயம், 100ஆவது போட்டியில் இரட்டை சதமடித்த ஒரேயோர் ஆஸி வீரர் என்ற பெருமையையும் பெற்றார்.

254 பந்துகளில் 16 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 200 ஓட்டங்களை எட்டிய வோர்ணர் காயம் காரணமாக பெவிலியன் திரும்பியிருந்தார்.

(ஐ)

# வோர்ணரின் இரட்டை சதத்தால் அவுஸ்திரேலிய அணி முன்னிலை!

மெல்பர்ன், டிசெ. 28

தென்னாபிரிக்காவுக்கு எதிராக மெல்பர்னில் நடக்கம் பொக்ஸிங் டே டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 197 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள தென்னாபிரிக்க அணி டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. முதல் போட்டியில் அபார வெற்றி பெற்றது அவுஸ்திரேலிய அணி.

கிறிஸ்மஸ் தினத்துக்கு மறுநாள் தொடங்கிய இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி, 189 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.



பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 45 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. வோர்ணர் 32, லபுஷாக்னே 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் இரண்டாம் நாளான நேற்றைய தினம் இருவரும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். 100 ஆவது போட்டியில் சதம் கடந்த வோர்ணர் தொடர்ந்து அதிரடி காட்டினார். இந்நிலையில், லபுஷாக்னே 14 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்க, அடுத்து வந்த ஸ்ரீவன் ஸ்மித் நிதானமாக ஆடினார்.

85 ஓட்டங்களைப் பெற்ற ஸ்மித் ஆட்டமிழக்க, இரட்டை சதத்தை பூர்த்தி செய்த வோர்ணர், இரட்டை சதத்தைப் பூர்த்தி செய்தார். தொடர்ந்து காயம் காரணமாக அவர் வெளியேறினார்.

தொடர்ந்து ட்ராவிஸ் ஹெட் நிதானம் காட்ட கமரூன் கிறீன் 6 ஓட்டங்களுடன் வெளியேறினார். நேற்றைய நாள் முடிவில் அவுஸ்திரேலியா 3 விக்கெட்கள் இழப்புக்கு 386 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ட்ராவிஸ் ஹெட் 48, அலெக்ஸ் ஹாரி 9 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்காமல் உள்ளனர்.

இன்று மூன்றாம் நாள் ஆட்டமாகும்.

(ஐ)



# பாபர், சல்மான் அபார சதம் பாகிஸ்தான் 438 ஓட்டங்கள்!

கராச்சி, டிசெ. 28

நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் 438 ஓட்டங்களை குவித்துள்ளது பாகிஸ்தான் அணி.

நியூசிலாந்து அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ளது. முதல் போட்டி நேற்று முன்தினம் தொடங்கியது.

முதலில் ஆடிய பாகிஸ்தான் அணிக்கு பாபர் அஸாம், அஹா சல்மான் ஆகியோர் அபாரமாக ஆடி சதம் குவித்தனர். பாபர் அஸாம் 161, சல்மான் 103, சர்பராஸ் அஹமட் 86 ஓட்டங்களை குவித்தனர்.

130.5 ஓவர்கள் தாக்குப்பிடித்த அவுஸ்திரேலிய அணி 438 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

நியூசிலாந்தின் பந்துவீச்சில் ரிம் சௌதி 3, அஜாஸ் பட்லே, மிற்செல் பிராச்வெல், இஷ் சோதி ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் நியூசிலாந்து அணி நேற்று 29 ஓவர்கள் நிறைவுபெற்றபோது, 101 ஓட்டங்களை விக்கெட் இழப்பின்றி எடுத்திருந்தது.

ரொம் லதாம் 40, டெவன் கொன்வே 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ஐ)

# தென்னாபிரிக்க வீரர் ஓய்வை அறிவித்தார்!



கேப்டவுன், டிசெ. 28

தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் பர்ஹான் பெஹர்தீன், அனைத்து வகை கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்காக 2012 முதல் 2018 வரை 59 ஒருநாள், 38 இருபது -20 போட்டிகளில் விளையாடியுள்ளார் 39 வயது பர்ஹான் பெஹர்தீன். ஒருநாள் கிரிக்கெட்டில் 6 அரைச்சதங்களும் இருபது - 20 போட்டியில் ஓர் அரைச் சதமும் எடுத்துள்ளார்.

ஐ. பி. எல். போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காகவும் விளையாடியுள்ளார். 2017இல் இலங்கைக்கு எதிரான இருபது -20 தொடரில் தென்னாபிரிக்க அணியின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

“கடந்த 18 வருடங்களில் ஒருநாள்கூட நான் வேலை செய்யவில்லை. கிரிக்கெட்டை ஆர்வத்துடன் விளையாடினேன். 4 உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்கேற்றதை ஆசீர்வாதமாகக் கருதுகிறேன் என்று ஓய்வு அறிவிப்பில் பர்ஹான் பெஹர்தீன் கூறியுள்ளார். (ஐ)

# உதைபந்தாட்ட ஜாம்பவான் பீலேயின் உடல்நிலை மோசம்!

சாவோ பாவ்லோ, டிசெ. 28

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட உதைபந்தாட்ட ஜாம்பவான் பீலே உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளாரென மருத்துவமனை வட்டாரம் தெரிவித்துள்ளது.

அவருக்கு இதயம் மற்றும் சிறுநீரகத்தில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவல் அவரது ரசிகர்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

உதைபந்தாட்ட ஜாம்பவான் பீலேவுக்கு கடந்த ஆண்டு பெருங்குடல் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மேலும், புற்றுநோய் பாதிப்பு இருந்த நிலையில் கடந்த 2021 செப்ரெம்பர் முதல் கீமோதெரபி சிகிச்சை எடுத்து வந்தார் பீலே. ஆனால், கடந்த சில நாட்களாக, அவரின் உடல்நிலை பலவீனமடைந்தது. அவரின் உடல் கீமோதெரபி சிகிச்சைக்கு ஒத்துழைக்கவில்லை. இதனால் சாவோ பாவ்லோ மாகாணத்தில் உள்ள போல்ஹா பகுதியில் உள்ள அல்பர்ட் ஐன்ஸ்டீன் மருத்துவமனையில் அவர் வாழ்க்கையின் இறுதிகட்ட சிகிச்சை பெற்று வருகிறார்.

கொரோனா தொற்றால் அவரது நுரையீரலும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இப்போது அவருக்கு சிறுநீரகம் மற்றும் இருதய செயல்பாடுகள் குறைந்து வருகின்றன என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

பீலேவின் மகள் கெல்லி நாஸ ிமென்டோ தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அண்மையில் வெளியிட்ட பதிவில் கிறிஸ்துமஸ் தினத்தன்று ஒட்டுமொத்த குடும்பத்தினரும் பீலேவுடன் இருந்ததாக தெரிவித்திருந்தார். பீலேவின் மகன் தந்தையின் கையை பிடித்திருக்கும் புகைப்படத்தை இன்ஸ்ட்ராகிராமில் பகிர்ந்து தந்தையே நீங்கள் தான் எனது வலிமை என்று பதிவிட்டிருந்தார். (ஐ)



# கோட்டா காலத்தில் நியமிக்கப்பட்ட இலங்கை இராஜதந்திரிகள் மாற்றம்!



## வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி தகவல்

கொழும்பு, டிசெ. 28

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் பல்வேறு நாடுகளுக்கு அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்ட சில இலங்கை தூதுவர்கள் பதவிக்காலம் முடிவடைந்தவுடன் மாற்றப்படுவார்கள் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள வெற்றிடங்களை பெரும்பாலும் தொழில் இராஜதந்திரிகளைக் கொண்டு நிரப்புவதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக இது முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது இராஜதந்திர சேவையில் 16 வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், அவற்றில் 12 பதவிகளுக்கு வெளிநாட்டுச் சேவையைச் சேர்ந்த இராஜதந்திரிகளைக் கொண்டு நிரப்பவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக அப்போது நியமிக்கப்பட்ட சி.ஏ.சந்திர பிரேமவின் பதவிக்காலம் விரைவில் முடிவடைகிறது.

அவருக்குப் பதிலாக நேபாளத்தில் பணியாற்றிய தொழில் இராஜதந்திரி ஹிமாலி அருணதிலக்க ஜெனீவாவுக்கு அனுப்பப்படவுள்ளார். பீஜிங்கில் உள்ள இலங்கைத் தூதுவர் பாலித கொஹொனவின் அனுபவம் இந்த நேரத்தில் முக்கியமானது என்பதால் அவருக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட்டது. மேலும், அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதுவர் சிறப்பாக பணியாற்றி வருவதால் அவர் மாற்றப்பட மாட்டார் என்றும் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

பணியமர்த்தப்படும் புதிய தூதுவர்களில், இரண்டு முன்னாள் வெளியுறவுச் செயலாளர்கள் அடங்குகின்றனர்.

அந்த வகையில் சித்ராங்கனி வாகீஸ்வர அவுஸ்திரேலியாவுக்கான தூதுவராகவும், அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே, இந்தோனேசியாவுக்கான தூதுவராகவும் நியமிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் மனிஷா குணசேகர பிரான்ஸூக்கும், எச்.எம்.ஜி.ஆர்.ஆர். கே. மெண்டிஸ் பஹ்ரைனுக்கும், ஏ.எஸ்.யு. மெண்டிஸ் வியட்நாமுக்கும், வருணி முத்துக்குமரன ஜேர்மனிக்கும், கபில ஜயவீர லெபனானுக்கும், எம்.எச். எம்.என். பண்டார இஸ்ரேலுக்கும், கே. கே.தெஷாந்த குமாரசிறி எத்தியோப்பியாவுக்கும் நியமிக்கப்படவுள்ளனர்.

இதுதவிர, சானக எச். தல்பஹேவா பிலிப்பைன்ஸூக்கும், பிரியங்கிகா விஜேகுணசேகர ஜோர்தானுக்கும், பி. காண்டீபன் குவைத்துக்கும், உதய இந்திரரத்ன ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும், சந்தித் சமரசிங்க மெல்பேர்னுக்கும் நியமிக்கப்படவுள்ளனர். (அ)

# சாரதிகளின் தவறுகளுக்காக புள்ளி முறைமை நடைமுறை

கொழும்பு, டிசெ. 28

வாகனத்தை செலுத்தும் போது சாரதி செய்யும் தவறுகளுக்காக சாரதி புள்ளி முறைமையை நடைமுறைப் படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்தார்.

இதன்படி, வீதியில் சாரதிகள் வாகனம் ஓட்டும்போது செய்யும் தவறுகளுக்கு புதிய முறைமையின் கீழ் தகுதி புள்ளிகளை வழங்குதல் மற்றும் அது தொடர்பான அபராதங்களை விதிக்கும் முறை அறிமுகப்படுத்தப் படும் என அவர் கூறினார்.

இது தொடர்பான அடிப்படை முறைமை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் விரைவில் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் சாரதி தவறுகளுக்கான புள்ளி முறையை அறிமுகப்படுத்தவுள்ளோம். அதன்படி, நெடுஞ்சாலையில் போக்குவரத்து விதிமீறல்களுக்கு. 20 புள்ளிகள் வரை வழங்கப்படும் முறை செயல்படுத்தப்படும். 20 புள்ளிகள் பெற்ற சாரதியின் உரிமம் ரத்து செய்யப்படும்.

அவ்வாறு இரத்து செய்யப்பட்ட காலத்துக்கு பின், மீண்டும் சாரதி உரிமம் பெற அவர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வாகன விபத்துக்களின் எண்ணிக்கையை குறைக்கும் பொருட்டே இந்த திட்டத்தை அமுல் செய்ய எதிர்பார்க்கிறோம்.இது தொடர்பான நமது தற்போதைய அடிப்படை வழிமுறை தயாரிக்கப்பட்டு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவேண்டிய அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.பெரும்பாலும், ஜனவரியில் அமைச்சரவை அனுமதியைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

# காணிகளை விடுவிக்கக் கோரி கேப்பாபிலவு மக்கள் போராட்டம்







முல்லைத்தீவு, டிசெ. 28

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவில், இராணுவத்தினர் அபகரித்துள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி, காணிகளுக்குரிய மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக கேப்பாபுலவு இராணுவ முகாமின் பிரதான வாயிலின் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன் னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காணிகளுக்குரிய மக்கள், எமது நிலம் எமக்கு வேண்டும், இராணுவமே வெளியேறு, எங்கள் சொந்தக் காணிகளுக்குள் இராணுவ முகாம் வேண்டாம், கேப்பாபுலவு எமது பூர்வீக கிராமம், இனவழிப்பு யுத்தம் முடிந்து 14 ஆண்டு கள் கேப்பாபுலவு மக்கள் இன்னமும் அகதிகளாக வீதிகளில், ஸ்ரீலங்கா இராணும் இன அழிப்பு இராணுவம் உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதா தைகளைத் தாங்கியவாறு கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் விஜயகுமார், காணிகளுக்குரிய பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# காய்கறிகளின் விலை மீண்டும் அதிகரித்தது

கொழும்பு, டிசெ. 28

கடந்த சில தினங்களை விட, காய்கறிகளின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

சில மரக்கறிகளின் விலை 100 சதவீதமாக அதிகரித்துள்ளதாக தம்புள்ளை விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தக சங்கத்தின் தலைவர் சாந்த ஏகநாயக்க தெரிவித்தார்.

நுவரெலியா உள்ளிட்ட பிரதேசங்களில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# விவசாய குடும்பங்களுக்கு ரூ.15 ஆயிரம் கொடுப்பனவு

கொழும்பு, டிசெ. 28

குறைந்த வருமானம் பெறும் விவசாய குடும்பங்களுக்கு தலா 15,000 ரூபா கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

07 மாவட்டங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறும் நெற் செய்கையாளர்களின் குடும்பங்களுக்கே இந்த கொடுப்பனவை வழங்க அமெரிக்க முகவர் நிலையம் தீர்மானித்துள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில், மாதாந்தம் 41,500 ரூபாவை விட குறைந்த வருமானம் பெறும் விவசாய குடும்பங்களுக்கே இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்த கொடுப்பனவை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இரு கட்டங்களாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் ஏ.எம். எச்.எல்.அபேரத்ன தெரிவித்தார்.

இதனிடையே, ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக 08 பில்லியன் நிதியை நாடளாவிய ரீதியில் நெற்செய்கையில் ஈடுபடும் 12 இலட்சம் குடும்பங்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# ரஷ்யாவில் இருந்து நாளை முதல் இலங்கைக்கு புதிய விமானசேவை

கொழும்பு, டிசெ. 28

ரஷ்யாவின் "ரெட் விங்ஸ்" விமான சேவை நிறுவனத்தின் இலங்கைக்கான விமான சேவை நாளை வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சிவில் விமான சேவை அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாச இதனைத் தெரிவித்தார்.

ரெட் விங்ஸ் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தினூடாக 404 ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தரவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அஃரூர் மற்றும் ஏரோப்புளொட் விமான நிறுவனங்கள் ஏற்கனவே ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு நேரடி விமான சேவைகளை ஆரம்பித்துள்ளன.

ரெட் விங்ஸ் மூலம் இலங்கைக்கான விமான சேவை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் ரஷ்யா - இலங்கை இடையில் 03 நேரடி விமான சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ)

# சட்டவிரோத தொலைபேசி அழைப்பு மேற்கொண்டு 2 கோடி ரூபா மோசடி!

கொழும்பு, டிசெ. 28

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு தொலைபேசி நிறுவனம் ஒன்றுக்கு இழப்பை ஏற்படுத்தும் வகையில் சுமார் 2 கோடி ரூபாவை மோசடி செய்தமை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த நிறுவனத்தின் முகாமையாளர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் மே மாதம் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் குறித்த நிறுவனம் ஒன்றின் சிம்மை பாவித்து சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளைப் பெற்று 53,983 அமெரிக்க டொலர்களை மோசடி செய்தமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளது.(அ)

## உள்ளூராட்சி...

தமது அலுவலகம் தயார். எனினும், இம்முறை புதிய மர வாக்குப் பெட்டிகள் தயாரிக்கப்படாது என்றும் அவர் கூறினார். பழையவையே திருத்தப்படுகின்றன - என்றார்.

இதேசமயம், அடுத்த வாரம் செய்தித் தொடர்பாளர் ஒருவரை நியமிக்கவும் தேர்தல்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது என்றும் அந்த அதிகாரி கூறினார்.

## 10ஆண்டுகளில்..

கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போது பருவப்பெயர்ச்சி மழைகாலம் என்பதால் டெங்கு நோய் பரவல் அதிகமாகவுள்ளது. நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 3, 4, 5ஆம் திகதிகளை விசேட டெங்கு ஒழிப்பு தினங்களாக அறிவித்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த மேலதிக அரசாங்க அதிபர், தற்போதைய காலநிலையால் சடுதியாக அதிகரிக்கும் டெங்கு நோய் பரவலை நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே கட்டுப்படுத்த முடியும் - என்றார்.

இந்தக் கல்துரையாடலில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், மருத்துவர் எஸ். சிவகணேஸ் மற்றும் பிரதேச செயலாளர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள் மற்றும் சுகாதார அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

## மின்கட்டணம்...

பட்ட சிறந்த கருதுகோளின் பிரகாரமே இந்த கட்டண அதிகரிப்பு சதவீதம் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வருடம் ஒகஸ்ட் மாதம் கட்டண அதிகரிப்பில் கோரப் பட்ட தொகை கிடைக்காமையால் மீண்டும் கட்டணத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது. மேலும், சமுர்த்தி பயனாளிகள் மற்றும் நிதி நெருக் கடியில் உள்ள குடும்பங்களுக்கு கட்டணத்தை அதிகரிக்கும் போது திறைசேரியின் மூலம் நிவாரணம் கிடைக்கும் - என்றார். (ஐ)

## வியட்நாமில்...

அனுப்பப்பட்டுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் 8ஆம் திகதி மியன்மாரில் இருந்து கப்பல் மூலம் கனடா செல்ல முயன்ற, இலங்கையைச் சேர்ந்த 303 பேர் பயணித்த லேடி ஆர் 3 படகு மியன்மாரில் இருந்து தென் கடற்பரப்பு வுங் டாவ் கடற்கரையில் இருந்து 258 கடல் மைல் தொலைவில் மூழ்கும் நிலையில் காணப்பட்டது

ஜப்பான் கப்பலால் காப்பாற்றப் பட்ட இந்தக் கப்பலில் இருந்தவர்கள் வியட்நாம் நாட்டிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்களை 3 தடுப்பு முகாமில் தடுத்துவைத்திருந்த நிலையில் சர்வதேச புலம்பெயர்ந்தோர் தொடர்பான அமைப்பான ஐ.எம்.ஓ அனுசரணையுடன் மீண்டும் நாட்டுக்கு திரும்ப விருப்பம் தெரிவித்த 151 பேரை நேற்று செவ்வாய்கிழமை வியட்நாம் நேரப்படி பிற்பகல் 5 மணிக்கு இலங்கைக்கு செல்லும் விமானத்தில் ஏற்றுவதற்காக முகாமில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவர்கள் இன்று புதன்கிழமை அதிகாலை கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இருளில்...

தினம் மின்சக்தி அமைச் சில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும்,

மின்சார சபையின் கடந்தகால நட்டத்தை ஈடுசெய்வதற்காக மின்கட்டணத்தை மீண்டும் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படும் விடயம் அடிப்படையற்றதாகும். மின்சார சபையில் கடந்த மற்றும் நடப்பு நட்டத்தை ஈடுசெய்ய வேண்டுமாயின் மின் கட்டணத்தை பன்மடங்கு அதிகரிக்க வேண்டும். ஆகவே, அது சாத்தியமற்றது.

2023 ஆம் ஆண்டுக்கான மின்கட்டமைப்பில் மின் உற்பத்தி, மின் விநியோகம் மற்றும் மின்சார துறையின் இதர சேவைகள் ஆகியவற்றின் செலவுகளை ஈடு செய்வதற்கு மின் கட்டணத்தை மீண்டும் அதிகரிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபையின் பரிந்துரைக்கு அமைய கடந்த ஒகஸ்ட் மாதம் மின்கட்டணத்தை அதிகரிக்க இலங்கை பொதுப் பயன் பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியிருந்தால் மின்கட்டணத்தை மீண்டும் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

மின்கட்டணத்தை அதிகரிக்கும் தீர்மானம் அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. மின்சார சபையின் எதிர்கால திட்ட மிடலுக்கு அமையவே மின்கட்ட ணத்தை மீண்டும் திருத்தம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. மின் கட்டண திருத்தம் தொடர்பான அறிக்கை எதிர் வரும் ஜனவரி 2ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் இடம்பெறவுள்ள அமைச் சரவை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

2023 ஆம் ஆண்டு மின்கட்டமைப்பு சீராக இடம் பெற வேண்டும் என்பதற்காகவே மின்கட்டணத்தை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மின் உற்பத்திக்கான செலவை முகாமைத்துவம் செய்யும் வகையில் தற்போதைய மின் கட்டண திருத்தம் அமையவில்லை. மின் உற்பத்திக்கான செலவு மற்றும் மின் கட்டண வருமானத்திற்கும் இடையில் சுமார் 27 ஆயிரத்து 800 கோடி ரூபாய் பற்றாக்குறை காணப்படுகிறது.

மின்கட்டண அதிகரிப்புக்கு ஒரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். நீர்மின் உற்பத்திக்கு தேவையான மழை வீழ்ச்சி சிறந்த முறையில் கிடைக்கும் வரை எரிபொருள் ஊடாகவே மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டும். அடுத்த ஆண்டு முதல் மின் உற்பத்திக்கு தேவையான எரிபொருளை கொள்வனவு செய்ய நிதி வழங்க முடியாது என திறைசேரி குறிப்பிட்டுள்ளது. மின் கட்டமைப்பை சீராக முன்னெடுத்து செல்ல வேண்டுமாயின் மின்கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் அல்லது வரி வீதத்தை அதிகரிக்க வேண்டும். மின் கட்டணத்தை அதிகரிக்காமல் இருக்க வேண்டுமாயின் மக்கள் பல மணித்தியாலங்கள் இருளில் இருக்க பழகிக் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

## தேர்தலில்...

தொடர்பில் அண்மையில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் எம்.பியின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஆறு கட்சிகள் சந்தித்துப் பேசின.

இதையடுத்து நேற்று முன்தினம் நடந்த தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் கூட்டத்தில் ஆறு கட்சிகளின் கூட்டமைப்புக்கு சம்மதம் தெரிவிக்க மறுத்திருந்தது.

இந்த நிலையில் இந்த விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் வினவியபோது,

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடும். தமிழ் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவது குறித்து மத்திய செயல் குழுவே கூடித் தீர்மானிக்கும் என்று கூறியுள்ளார். (ஐ)

## உர விநியோகம் 80 வீதம் நிறைவு



கொழும்பு, டிசெ. 28

விவசாயிகளுக்கு தேவையான யூரியா உரத்தின் 80 வீத விநியோகம் நிறைவடைந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

பெரும்போகத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரத்தை அரசாங்கம் விநியோகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில்...

காணப்படாத இந்த சடலத்துக்கு உரியவர் இறந்து 3 நாட்களாகலாம் என்று கூறப்படுகின்றது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வடக்கு...

குணவங்ச தேரர் தெரிவித்தார்.

மேலும், தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக அரசாங்கம் குறிப்பிட்டுக் கொள்கிறது. தேவையில்லாத பிரச்னைகளை தோற்றுவிப்பதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதிகார பகிர்வு என்று குறிப்பிட்டு இனங்களுக்கு இடையில் பிரச்னைகளை தோற்றுவிப்பதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ளவேண் டும் - என்றும் கூறினார்.

கோட்டை நாக விகாரையில்இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பேசிய அவர், “அரசாங்கத்தின் செயல்பாடு களை கண்டித்து போராட்டத்தில் ஈடுப்படும் பிக்குகளை அடக்கும் வகை யில் புதிய சட்டத்தை இயற்ற அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. ஒருசில தரப்பினரின் முறையற்ற செயல்பாடுகளால் ஒட்டுமொத்த பௌத்த பிக்குகளையும் குறைகூற முடியாது.

புத்த சாசனத்தில் உரிய கோட்பாடுகள் உள்ளன. பௌத்த பிக்குகள் அந்த கோட்பாடுகளை முறையாக பின்பற்ற வேண்டும். பிக்குளை அடக்கும் வகையில் சட்டங்களை இயற்றுவதை அரசாங்கம் கைவிட வேண்டும். இந்த அரசாங்கத்துக்கு மக்களாணை கிடையாது. உதிரிப்பாகங்களை இணைத்த வாகனத்தைப்போல் இயங்கும் இந்த அரசாங்கம் தன்னிச்சையாக செயல்பட முடியாது.

எனது விகாரையின் மாத மின்கட்டணம் 48 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமாக உள்ளது. மின்கட்டணம் அதிகம் என்பதற்காக புத்த பெருமானின் சிலையை இருளிலா வைப்பது”, என்றும் கேள்வி எழுப்பினார். (ஐ)

## உள்ளூராட்சி...

கிளையின் செயலாளர் வீ. வியஜகுமார் இதற்கான அழைப்பை விடுத்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட பணிமனையான அறிவகத்தில் விண்ணப்பங்களை பெற்று எதிர்வரும் ஜனவரி 5ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் அந்த அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி தேர்தலுக்கு இன்னமும் அழைப்பு விடுக்கப்படவில்லை. இதனிடையே, உள்ளூராட்சி தேர்தலை கூட்டாகவா தனித்தா எதிர்கொள்வது என்பது தொடர்பில் தமிழரசு கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் குழப்பங்கள் நீடிக்கின்றன. இந்த நிலையிலேயே தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி கிளை வேட்பாளர்களை கோரியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழ் தேசிய...

எதிராக செயல்படுகின்றனர் என்றும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

நேற்றைய தினம் இது தொடர்பில் விக்னேஸ்வரன் எம். பி. மேலும் தெரிவித்தவை வருமாறு,

நான் சிறுபிள்ளைத்தனமாக செயல்படுவதாக மட்டக்களப்பு எம்.பி சாணக்கியன் குறிப்பிட்டதாக சிலர் சுட்டிக் காட்டியிருந்தனர். அவர் சிறியவர். அப்படித்தான் பேசுவார். அதனை பொருட்படுத்தத் தேவையில்லை.

நான் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியதை சிறுபிள்ளைத்தனம் என அவர் சொன்னாராம். ஆனால், அந்த கடிதம் எழுதியதால் பல விடயங்கள் நடந்துள்ளன. நாங்கள் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும், சுமந்திரன் தொலைபேசியில் அழைத்து, ஜனாதிபதி கலந்துரையாடலுக்கு அழைக்கிறார் என்றார்.

போதிய அவகாசம் வழங்காமல் சந்திப்பு திகதி குறிப்பது பொருத்தமற்றது என நான் ஒரு கடிதம் அனுப்பினேன். அந்த கடிதம் அனுப்பியதன் பின்னர்தான் ஜனாதிபதி செயலகத்திலிருந்து சொன்னார்கள், அந்த சந்திப்பு ஜனாதிபதி திட்டமிட்டதல்ல. நாங்கள் சந்திக்க வரலாமா என சுமந்திரனே கேட்டுள்ளார். சரி, கேட்கிறீர்கள், வாருங்கள் என்றுதான் ஜனாதிபதி கூறியுள்ளார். ஆனால் ஜனாதிபதி அழைப்பதாக எமக்கு சுமந்திரன் சொன்னார். அதையும், நாங்கள் யாழ்ப்பாணம் வந்த பின்னர்தான் சுமந்திரன் அழைப்பு விடுத்தார். நாங்கள் சந்திப்புக்கு வரக்கூடாது என்பதற்காகவே அவர் அப்படிச் செய்திருக்கிறார்.

நான் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்துக்கு அனுப்பப்பட்ட பதிலில், சுமந்திரன் கேட்ட சந்திப்பு உத்தியோகப்பற்றற்றது என்றும், ஜனவரி முதல் வாரத்தில் திட்டமிட்டுள்ள சந்திப்புக்குப் போதிய அவகாசத்துடன் அழைப்பு விடுக்கப்படும் என தெரிவித்துள்ளனர். அந்த கடிதத்தாலேயே இதெல்லாம் நடந்துள்ளது. என்னை விட இரண்டரை மடங்கு வயது குறைந்தவர் இவையெல்லாம் விளங்காமல் பேசியுள்ளார்.

இதேவேளை, தமிழ்த் தேசிய கட்சிகளை ஓரணியில் திரட்டும் முயற்சிகள் குறித்து கருத்து தெரிவித்த அவர்,

தமிழ் தரப்புகளுக்குள் பிரிவினை இருப்பதால்தான் சிங்கள அரசுகள் எம்மை ஏமாற்ற முடிந்தது. எமக்குள் ஒற்றுமை இருக்கிறதென்பதை கண்டால் அவர்களின் அணுகுமுறையில் மாற்றம் இருக்குமென நம்புகிறோம். ஆனால், இப்போதும் தமிழ் தரப்பில் சிலர் தாம் தனித்து போக வேண்டுமென கூறுகிறார்கள். ஆனால், தமிழ் தேசிய கட்சிகளை இயன்றவரை ஒன்றிணைத்து செயல்படவே முனைகிறோம்.

இலங்கை தமிழரசு கட்சியின் அரசியல் செயல்குழுவில் எடுக்கப்பட்டதாக கூறப்பட்ட முடிவுகள் பற்றி செய்திகள் வெளியாகின. அந்த செயல்குழுவில் உள்ள 9 பேரில் பெரும்பான்மையானவர்கள் மாவை சேனாதிராசாவுக்கு எதிரானவர்கள். ஆனால், ஜனவரியில் கொழும்பில் தமிழ் கட்சிகளின் சந்திப்பு உள்ளதாக மாவை சொன்னதாகவும் செய்தி வந்தது. இது முரண்பாட்டை ஏற்படுத்தக்கூடும்.

ஆனால், இந்த முரண்பாடு ஏற்படுவதற்கு சிலரின் சுயநல சிந்தனைகள்தான் காரணம். மாவை சேனாதிராசாவை சிறையிலிருந்து விடுவித்த நீதிபதி நான்தான். ஆனால், இப்போதைய நிலைமையில் மாவையை எங்கள் தலைவராகக் கொண்டு, விடயங்களை நகர்த்தலாம் என்றுதான் சொல்கிறேன். மக்களுக்காக நாங்கள் செயல்பட ஆரம்பித்தால், சுயநல சிந்தனைகளை கைவிட்டு, மக்கள் சார்பில்தான் சிந்திக்க வேண்டும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஓம் சரவணசேவா அறக்கட்டளையில் வவுனியாவில் 4 வீடுகள் கையளிப்பு



வவுனியா, டிசெ. 28

வவுனியா ஈச்சங்குளத்தில் ஐக்கிய இராச்சியத்தின் ஓம் சரவணசேவா அறக்கட்டளையின் ஊடாக அமைக்கப்பட்ட 4 வீடுகள் நேற்று மக்களுக்கு கையளிக்கப்பட்டன.

சற்குரு சரவண பாவா மனசாந்தி குடியிருப்பு எனும் பெயரில் அமைக்கப்பட்ட இந்த நான்கு வீடுகளும் சுமார் 45 இலட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்டிருந்ததுடன் இவை விசேட தேவையுடையோர் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

இதன்போது சற்குரு சரவண பாபா குரு, பாராளுமன்ற உறுப்பினர் மு. இராதாகிருஷ்ணன், வவுனியா பிரதேச செயலாளர் நா. கமலதாசன் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (அ)

# போதுமானளவு எரிவாயு கையிருப்பில் உள்ளது!

கொழும்பு, டிசெ. 28

எதிர்வரும் நாட்களில் நுகர்வுக்கு தேவையான சமையல் எரிவாயு போதுமான அளவு கையிருப்பில் உள்ளது. இதன் காரணமாக பொதுமக்கள் அச்சம் கொள்ள தேவை இல்லை என்றும் லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நுகர்வுக்கு தேவையான அளவு எரிவாயு கையிருப்பில் உள்ளது. கொரோனா தொற்று காரணமாக இரண்டு வருடங்களின் பின்னர் நத்தார் மற்றும் புதுவருட கொண்டாட்டங்கள் காரணமாக எரிவாயுக்கு அதிகளவிலான கேள்வி நிலவுகிறது.

நாட்டிற்கு மாதாந்தம் 24 ஆயிரம் மெட்ரிக்தொன் எரிவாயு தேவைப்படுகின்ற போதிலும் இந்த மாதம் 35 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிவாயு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஜனவரி மாதத்திற்கு தேவையான எரிவாயு அளவைவிட மேலதிகமாக 27 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிவாயு கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ஐ)

# கோரம் இன்மையால் ஒத்திவைக்கப்பட்டது பருத்தித்துறை நகரசபை தவிசாளர் தெரிவு

வடமராட்சி, டிசெ. 27

யாழ்ப்பாணம் பருத்தித்துறை நகரசபைக்கான புதிய தவிசாளரைத் தெரிவு செய்யும் அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவிருந்த நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் அமர்வைப் புறக்கணித்தமையால், உரிய கோரம் இல்லாததைச் சுட்டிக்காட்டி, சபை அமர்வை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஒத்திவைத்தார்.

பருத்தித்துறை நகர சபையின் தவிசாளராகக் கடமையாற்றிய ஜோசப் இருதயராஜா பதவி விலகிய நிலையில், புதிய தவிசாளருக்கான தெரிவு நேற்று இடம்பெறும் என திகதியிடப்பட்டது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில் காலை சபை அமர்வு கூடிய போது போதிய உறுப்பினர்கள் சபைக்குச் சமூகமளிக்காததால், 30 நிமிடங்கள் சபை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் கூட்டப்பட்ட போதும், சபையில் போதிய கோரம் இருக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் சமத்துவக் கட்சி உறுப்பினர்கள் என 7 பேர் சபைக்கு சமூமளித்திருந்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 6 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பி. கட்சியின் இரு உறுப்பினர்களும் சபை அமர்வை புறக்கணித்தமையால், சபைக் கூட்டத்தை நடத்துவதற்குத் தேவையான 8 என்ற கோரத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இதனால் சபை நடவடிக்கையை ஒத்திவைத்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர், புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றார். (அ-2)

# 38 வருட காலப் பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற யாழ்.பிரதி பொலிஸ்மா அதிபர்

யாழ்ப்பாணம், டிசெ. 28

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் பிரியாவிடை நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண பொலிஸ் நிலைய வளாகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றி வந்த விஜித குணரட்ண, தனது 38 வருட கால பொலிஸ் சேவையை நேற்றைய தினத்துடன் நிறைவு செய்து ஓய்வு பெற்றார்.

அதனை முன்னிட்டு, அவருக்கான பிரியாவிடை நிகழ்வு, யாழ் பொலிஸ் நிலைய மைதானத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் ஆரியகுளம் நாக விகாரையின் விகாராதிபதி, ஏனைய மத தலைவர்கள் கலந்து கொண்டு ஆசி வழங்கியதுடன், பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணி வகுப்பு மரியாதை வழங்கப்பட்டு , மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு நினைவு பரிசிலும் வழங்கப்பட்டது.



இந்த நிகழ்வில் யாழ்,காங்கேசன்துறை பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், யாழ் மாவட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள்,பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (அ)

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 2 வங்கிகளுக்கு 7,000 கோடி ரூபா கடனை செலுத்தவில்லை

கொழும்பு, டிசெ. 28

இரண்டு அரச வங்கிகளில் இருந்து குறுகிய கால கடனாக பெறப்பட்ட 7,162.1 கோடி ரூபாவை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் செலுத்தவில்லை என தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் திறைசேரி உத்தரவாதத்தின் அடிப்படையில் 2016/2017 ஆம் ஆண்டில் குறுகிய கால நிதித் தேவைகளுக்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் வசதிகளைப் பெற்றுள்ளது.

மேலும், 2017/2018 ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாக முந்தைய கடன் தொகையை செலுத்தாமல் 2,944 கோடி ரூபாய் கடன் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 2020/2021 ஆம் ஆண்டில் இதே 02 அரச வங்கிகளிடம் மூன்றாவது தடவையாக 75 மில்லியன் அமெரிக்க டொலர் கடனாகப் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின்படி, மார்ச் 31, 2021 இற்குள், இரண்டு அரச வங்கிகளுக்காக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 7,162.1 மில்லியன் ரூபாவை செலுத்த வேண்டும்.

தேசிய திறைசேரியின் உத்தரவாதத்தின் பேரில் இரண்டு அரச வங்கிகளில் இருந்து மூன்று தடவைகள் பெறப்பட்ட குறுகிய கால கடன் தொகை இன்னும் தீர்க்கப்படவில்லை என கணக்காய்வு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# யாழ். பல்கலைக்கழகத்தில் மார்கழி இசை விழா












இந்திய துணைத் தூதரகம், நல்லூர் சைவ தமிழ் பண்பாட்டு கலைக்ககூடல், யாழ். வணிகர் கழகம் இணைந்து நடத்தும் மார்கழி இசைவிழா 2022 நேற்று யாழ். பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமானவேளை...!

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.